★

Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

மலர் 7 இதழ் 37

National Tamil Daily தேசிய தினசரி

குரோதி பங்குனி 4 துல்கஃ பிறை 13 (17 3-65) புதன்கிழமை

## தாதிகளின் சேவை!

ஆஸ்பத்திரிகளில் பணியாற்றும் தாதிகள் விசேஷ ஆடைகள் அணிவதுண்டு. அப்படி அணிய வேண்டுமென்பது சட்டம். அழகுக்காக அணியும் அலங்கார ஆடையல்ல அவை! பலவிதமான நோயாளிகள் உள்ள ஆஸ்பத்திரிகளில் பணியாற்றும் தாதிகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் இந்த ஆடை அவர்களுக்கு உதவி புரிகிறது. ஆனால் நமது யாழ்ப்பாண நகரில் மார்க்கட்டுகளிலும், பஸ் நிலையங்களிலும் மற்றும் பல இடங்களிலும் இந்த ஆடை அணிந்த கோலத்துடன் தாதிகளை அடிக்கடி காணக்கூடியதாக இருக்கிறது. இதன் மூலம் அவர்கள் ஆஸ்பத்திரியிலிருந்து தொற்று நோய்க்கிருமிகளை வெளி இடங்களுக்கும் வெளியிடங்களிலிருந்து நோய்க்கிருமிகளை ஆஸ்பத்திரிக்குள்ளும் கொண்டு செல்கிறார்களென்று ஒரு வைத்திய மாணவன் குறை கூறுகிறார். ஆஸ்பத்திரியில பணி புரியும் சமயத்தில் மட்டும் இந்த ஆடையை அணிந்துவிட்டு வெளியே செல்லும் சமயம் வேறு ஆடை அணிந்தால் என்ன? இது அவர்களுக்கும் அவர்களின் குடும்பத்துக்கும் கூட நன்மை செய்யுமல்லவா!



## 3 செய்மதிகள்

மாஸ்கோ, மார்ச் 16

ஒரே உந்து ராக்கெட் மூலம் 3 ஆளில்லா செயற்கைக்கிரகங்களை ரஷ்யா வான்வெளிக்கு அனுப்பியிருக்கிறது.

# கேரளத்தில் மீண்டும் ஜனாதிபதி ஆட்சியா?

## மந்திரிசபை அமைப்பதில் பெரும் இழுபறி

திருவனந்தபுரம், மார்ச் 16

இந்தியாவின் தென் கோடியிலுள்ள கேரள ராஜ்யத்தில் மந்திரிசபை அமைக்கும் முயற்சி இன்னும் இழுபறிப்பட்டுக்கொண்டிருக்கிறது. தற்போதைய நிலையில் மீண்டும் ஜனாதிபதி ஆட்சி ஏற்படுமோ என பார்வையாளர்கள் சந்தேகிக்கின்றனர்.

இன்று கேரள கவர்னர் திரு. வி. வி. கிரி அரசியல்கட்சித் தலைவர்களைச் சந்தித்து மந்திரிசபை அமைக்கும் பிரச்சினை பற்றி ஆலோசனை நடத்தினார். கேரளத்தில் தேர்தல்கள் முடிந்து 10 நாட்கள் ஆகிய பின்பும் இன்னும் மந்திரி சபை அமைக்கப்படவில்லை.

இன்று கவர்னரை முதலில் சந்தித்தவர் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் தலைவர் திரு. ஈ. எம். எஸ். நம்புதிரிபாத். 133 பேர் கொண்ட சட்டசபையில் 63 பேர்கள் தமது கட்சியுடன் மந்திரிசபை அமைக்கும் விஷயத்தில் ஒத்துழைக்கத் தயாராய் இருப்பதாக அவர் கவர்னரிடம் குறிப்பு ஒன்றைச் சமர்ப்பித்தார்:

40 தொகுதிகளில் வெற்றி பெற்ற தமது கட்சியுடன் 13 சம்யுக்த சோஷலிஸ்டுகளும், 4 சுயேச்சைகளும் 3 கிருஷிகதொழிலாளர் கட்சியினரும், வலதுசாரி கம்யூனிஸ்டுகளும் ஒத்துழைப்பார்கள் என நம்பூதிரிபாத் கவர்னரிடம் தெரிவித்தார்

அவருக்குப் பின் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு ஏ. ஜே. ஜோன் கவர்னரைச் சந்தித்து தமது கட்சி எதிர்க்கட்சியாக விளங்கும் என்றும், மந்திரி சபை அமைக்காது என்றும் தெரிவித்துக்கொண்டார்.

## தேர்தல் முடிவு 9 மணிக்குத்தெரியும்

கொழும்பு, செவ்.

திங்கட்கிழமை மாலை வாக்களிப்பு முடிவடைந்ததும் வாக்குகள் எண்ணும் வேலைகள் ஆரம்பமாகும். முதலாவது தேர்தல் முடிவு இரவு 9 மணியளவில் அறிவிக்கப்படலாமென்று தேர்தல் கமிஷனர் தெரிவித்துள்ளார்.

## 40,000 டன் அரிசி வாங்கப்படும்

கொழும்பு, செவ்வாய்

40,000 டன் தாய்லாந்து அரிசியை இலங்கை வாங்கவிருக்கிறது. இது சம்பந்தமான ஒப்பந்தம் நேற்று கைச்சாத்திடப்பட்டது. இவ்வாண்டுக் கடைசியில் இந்த அரிசி வந்து சேரும். ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்ட அரிசியுடன் மொத்தம் 160,000 டன் அரிசி தாய்லாந்திலிருந்து வருகிறது

ஆனால் இதன் விலையை உணவு அமைச்சு வெளியிடவில்லை.

## உலக ஜனத்தொகை 600 கோடியாகும்

நியூயோர்க், மார்ச் 16

இந்த நூற்றாண்டின் இறுதியில் உலக ஜனத்தொகை இரட்டிப்பாகக் கூடும் என அதாவது 600 கோடி மக்களைக் கொண்டதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது

இதுபற்றி அடுத்த வாரம் 18 நாடுகளைச் சேர்ந்த ஐ. நா. குழு ஒன்று ஆராயவிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

## நட்சத்திர மண்டலத்தில் 35 புதியபொருட்கள்

புதுடில்லி, மார்ச் 16

நட்சத்திர மண்டலத்தில் 35 புதிய பொருட்களை விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்களென்றும் இன்னும் 5 ஆண்டுகளில் புதிய பல உண்மைகள் கண்டுபிடிக்கப்படுமென்றும் கணிதநிபுணர் டாக்டர் கார்லிங்கர் அறிவித்திருக்கிறார்.

## தமிழாசிரியர்க்கு இரண்டாந்தர தலைமையாசிரியர்பதவி உயர்வு

யாழ்ப்பாணம், புதன்

இவ்வருடம் மே மாதம் முதல் திகதி தொடக்கம் 109 தமிழாசிரியர்களுக்கு இரண்டாந்தரத் தலைமையாசிரியர் பதவியுயர்ச்சி கிடைப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை கல்வித் திணைக்கள பரிபாலனப் பகுதி மேற்கொண்டுள்ளதாக அகில இலங்கைஅரசினர் பாடசாலைத் தமிழாசிரியர் சங்கப் பொதுக் காரியதரிசி தெரிவித்துள்ளார்.

109 ஆசிரியர்களில் 54 பேர் சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர்களென்றும் 55 பேர் அரசினர் பாடசாலை ஆசிரியர்களென்றும் அவர் கூறுகிறார்.

இவ்வாசிரியர்கள் எவ்வெப் பகுதிகளில் நியமனம் பெறவிருக்கிறார்களோ அவ்வப் பகுதி உதவி வித்தியாதிபதிகளுக்கும், வித்தியாதிகாரிகட்கும கல்வித் திணைக்களப் பகுதி உதவி வித்தியாதிபதி, பிரஸ்தாப ஆசிரியர்களின் அட்டவணையுடன் அனுப்பிய கடிதத்தில் இவர்கட்கு நியமனம் வழங்கும்படி கேட்டுள்ளார்.

## "தமிழருக்கென ஒரு தமிழ் பல்கலைக்கழகம் அவசியம்"

உடுப்பிட்டி, செவ்வாய்

"ஒவ்வொரு குழந்தையும் தன தாய் மொழி மூலம் கல்வி பெறுவது உலகம் ஏற்றுக் கொண்ட உரிமையாகும். வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் வசிக்கும் தமிழ் பேசும் குழந்தைகளுக்குத் தமிழ் மூலம் கல்வி கற்கும் வசதிகள் படிப்படியாக மறுக்கப்பட்டு வருகின்றன. நாடற்றவர் என்று கருதப்படுபவர்களின் குழந்தைகள் சிங்களம் மூலமே கல்விகற்கவேண்டும் என்ற வெள்ளை அறிக்கை சிபார்சுசெய்வது நாம் எதிர்க்க வேண்டியவொன்று. இந்நாடு முழுவதும் வாழும் தமிழ் பேசும் குழந்தைகள் ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை தமிழ்கற்கும் உரிமைக்காக இலங்கைத் தமிழரசுக்கட்சி போராடும். பூரணவளர்ச்சி பெற்ற நுண்கலைக்கல்லூரி, தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவையும் தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு தமிழ் பல்கலைக்கழகமும் நிறுவப்படவேண்டும். தமிழ்ப் பாடசாலைகளின் தரத்தைக் குறைக்கும் முயற்சிகளையும், சிங்களக் கல்வியையோ சிங்கள ஆசிரியரையோ தமிழ்ப் பிரதேசத்தில் திணிக்கும் முயற்சியைத் தமிழரசுக் கட்சி எதிர்த்தே தீரும்."

இவ்வாறு உடுப்பிட்டித் தொகுதி தமிழரசு வேட்பாளர் திரு. க. ஜெயக்கொடி தம்மை ஆதரிக்குமுகமாக துன்னாலை துணுவில் பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவர்மேலும் கூறியதாவது:-

தமிழ்மக்களின் ஒத்துழைப்பின்றி ஆட்சியை நீடித்தும் பூரணதிருப்தியுடனும் நடத்த முடியாது என்பதைச் சிங்கள அரசியல் கட்சிகளும் தலைவர்களும் நன்குணர்ந்துவிட்டனர். இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழினம் ஒன்றுபட்டுவிட்டது என்பதை நாம் இம்முறைத் தேர்தலில் வாக்களிப்பதிலிருந்து உலகறியச் செய்யவேண்டும் மொழியும் பிரதேசமும் காக்கப்பட்டு நமது குழந்தைகள் வருங்காலத்தில் வளமாகவாழ வேண்டுமானால் தமிழரசுக் கட்சியை ஆதரிக்கவேண்டும்

நல்லூர்த் தொகுதி தமிழரசு வேட்பாளர் டாக்டர் இ. மு. வி. நாகநாதன் பேசுகையில், தமிழ் மக்களின் சுதந்திரத்திற்காக நாம் கோரும் சமஷ்டி ஆட்சி வேண்டுமா அல்லது நம்மை ஆளும் இனத்தவரின் ஒற்றை

(6-ம் பக்கம் பார்க்க)

## ராணுவத்தாக்குதல்? காயங்களுடன் ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

மாவிட்டபுரம்; செவ்.

காங்கேசன்துறை ரயில் நிலையத்தில் கடமையாற்றும் செல்வராஜா ஹரிச்சந்திரன் என்பவர் காயங்களுடன் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரை ராணுவச் சிப்பாய்கள் சிலர் ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர்.

தாங்கள் வீதியில் சென்று கொண்டிருக்கையில் செல்வராஜா ஹரிச்சந்திரன் தங்களது "ஜீப்"பில் வந்து விழுந்ததாகவும் அதனால் அவர் காயமடைந்ததாகவும் பொலிஸில் ராணுவத்தினர் புகார் செய்திருந்தனர்.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஹரிச்சந்திரன் பொலிசாருக்குக் கொடுத்த வாக்குமூலத்தில் தம்மை ராணுவத்தினர் அடித்துக் காயப்படுத்தியதாகத் தெரிவித்துள்ளார்.

தாம் காங்கேசன்துறை வீதியில் சென்றுகொண்டிருக்கையில் ஒரு 'ஜீப்' வண்டியில்வந்த ராணுவத்தினர் தம்மை அதில் ஏறும்படி கூறியதாகவும் தாம் அதில் ஏறியதும் அவர்கள் துப்பாக்கிப்பிடியால் தமக்கு அடித்ததாகவும் பின்னர் ஆஸ்பத்திரியில் கொண்டுவந்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இப்புகார்பற்றி காங்கேசன்துறைப் பொலிஸார் விசாரணை செய்கின்றனர்.

## பரிசோதனைக்கு உட்பட மறுக்கும் வாக்காளர்

### புதியசட்டத்தின் படி வாக்குரிமை மறுக்கப்படுவர்!

கொழும்பு, செவ்வாய்

வாக்களிப்புத் தினத்தன்று இடது கைச் சுட்டு விரலில் அழியா மை பூசுவதற்கு எவரும் மறுத்தால் புதிய சட்டத்தின்படி அவரது வாக்குரிமை மறுக்கப்படுமெனப் புதிய கெஸட் அறிவித்தல் கூறுகிறது.

இடது கைச் சுட்டுவிரல் இல்லாதவர்களுக்கு வேறு விரலில் இந்தஅடையாளமிடப்படும்.

புதிய ஏற்பாட்டின்படி ஒரு வாக்காளர் தேர்தல் நிலையத்தில் 3 அதிகாரிகளின் பரிசோதனைக்கு உட்படவேண்டியிருக்கும்.

அழியா மை கண்டுபிடிக்கப்பட்ட பின்பு அல்லது பரிசோதிக்க மறுப்புத் தெரிவித்தால் புதிய சட்டப்படி அவர்களது வாக்குரிமை மறுக்கப்படக்கூடும். ஒரு வாக்காளர் வாக்கு அட்டையையும் தன்னுடன் கொண்டுசெல்லவேண்டும். வேறொருவரது வாக்கு அட்டையைக் கொண்டுசெல்வது குற்றமாகும்.

தேர்தலில் ஆள்மாறாட்டத்தைத் தடுக்கும் முயற்சிகளில் ஒன்றாக இந்த அழியா மை அடையாள ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

தேர்தலின்போது இலங்கைப் போக்குவரத்துச் சபை 250 பஸ்களை சேவைக்கு விடவிருக்கிறது.

## டாக்டர் ஸகீர் ஹுஸெய்ன் தற்காலிக இந்திய ஜனாதிபதி

புதுடில்லி, மார்ச் 16

இந்திய உபஜனாதிபதி டாக்டர் ஸகீர் ஹுஸெய்ன் தற்காலிகமாக ஜனாதிபதியின் கடமைகளை ஏற்பதற்கு இன்று பிரதம நீதிபதி திரு. கஜேந்திர கட்கர் முன்னிலையில் ஸ்வாசப்பிரமாணம் செய்துகொண்டார்.

பிரதமர் திரு. சாஸ்திரி, இதர மந்திரிசபை அங்கத்தினர்கள் முதலியோர் இதுசம்பந்தமான வைபவத்தில் பிரசன்னமாகியிருந்தனர். தாம் தற்காலிகமாக உதவிப்பொறுப்பை ஏற்றபின் டாக்டர் ஸகீர் ஹுஸெய்ன் ஐ. அ. குடியரசுக்கு மீண்டும் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு நாஸருக்கு வாழ்த்துச்செய்தி அனுப்பினர்.

### ஞானவாக்கு

எல்லாம் நீயென எண்ணுதல் இன்பமே. எல்லாம்நானென எண்ணுதல் இன்பமே. எல்லாம்சிவன் செயல்என்பதும் இன்பமே எல்லாம்என் செயல்என்பதும் இன்பமே.

— ஸ்ரீ யோகசுவாமிகள்


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 889.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு பங்குனி மீ 4 உ (17-3-65)


## பொதுமக்கள் கடமை

தேர்தல் அமைதியாக நடைபெறுவதற்கு அபேட்சகர்களும் பொலிசாரும் உதவி புரிந்தால் போதாது. பொதுமக்களின் குறிப்பாக வாக்காளரின் பொறுப்பும் அதிகம் உண்டு.

தேர்தல் சுதந்திரமாகவும் அமைதியாகவும் நடைபெற வேண்டும். இததேர்தலில் போட்டியிடும் கட்சிகளும் அபேட்சகர்களும் சென்ற மூன்றுமாத காலமாகத் தங்கள் கொள்கைகளையும் நோக்கங்களையும் பிரசாரக் கூட்டங்கள் மூலமும் துண்டுப்பிரசுரங்கள் மூலமும் எடுத்துக் கூறியுள்ளனர். "எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்பது திருவள்ளுவர் வாக்கு. நிதானமாகச் சிந்தித்து வாக்காளர் தமது பொன்னான வாக்குகளை அளிக்க வேண்டும். தேர்தல் முடிந்தபின் பொதுவாக வாக்காளர்களை சிலர் குறை கூறுவதுண்டு. பெரும்பாலும் தோல்வியடைந்த அபேட்சகர்களே கூறுவார்கள். அவை ஏமாற்றத்தின் பிரதிபலிப்புத்தான் என்றாலும் குறைகளுக்கு இடம் வைக்காமல் நடந்து கொள்வதேமேல். "மதுபானத்துக்கும் பணத்துக்கும் வாக்களித்துவிட்டனர்" என்று முன்னைய தேர்தல்களின் முடிவு வெளியானதும் பல இடங்களிலும் பலர் குறை கூறினர். மதுபானத்துக்கும் பணத்துக்கும் வாக்குகளை அளிப்பது எவ்வளவு மோசமான செயலோ அதே அளவு மதுபானத்துக்கும் பணத்துக்கும் வாக்குகளைவாங்குவதுமாகும். முன்னைய தேர்தல்களில் மதுவும் பணமும் பல இடங்களிலும் வழங்கப்பட்டது உண்மையாக இருப்பினும் அவற்றை வாங்கிய வாக்காளர் அவற்றை வழங்கியவர்களை ஏமாற்றியுமிருக்கின்றனர். இன்று பொதுமக்கள் அரசியலில் நிரம்பிய அறிவு பெற்றுள்ளனர். இவர்களை ஏமாற்றுவது சுலபமல்ல மதுபானமும் பணமும் இம்முறை தேர்தலில் இடம்பெறுவதாகத் தெரியவில்லை. இடம்பெறுமென நாம் எதிர்பார்க்கவுமில்லை.

149 பார்லிமெண்ட் அங்கத்தவர்களைத் தெரிவுசெய்வதற்காக இலங்கை வாக்காளர் இன்னும் ஐந்து தினங்களில் தங்கள் வாக்குகளை உபயோகிக்கப்போகிறார்கள். 149 பிரதிநிதிகளை மட்டுமல்ல அடுத்து நாட்டை ஆட்சிபுரியும் அரசாங்கத்தையும் தெரிவு செய்யும் பொறுப்பு வாக்காளருடையது. நாட்டின் எதிர்காலத்தையும் நாட்டு மக்களின் முன்னேற்றத்தையும் நிர்ணயிக்கும் பெரும் பொறுப்பு வாக்காளர்களிடம் தானுள்ளது. தமிழ்பேசும் மக்களின் பொறுப்பு பற்றிச் சொல்லவேண்டியதில்லை. இலங்கை சுதந்திரம் பெற்றுவிட்டபோதிலும் தமிழ்பேசும்மக்கள் தங்களுக்கு அந்நிய ஆட்சியிலிருந்த உரிமைகளைக்கூட இழந்துவாழ்கின்றனர். இந்நிலையில் இழந்த உரிமைகளைப் பெறுவதற்கும் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழ்வதற்கும் வழிகாட்டக்கூடிய தகுதியானவர்களைத் தெரிவுசெய்யவேண்டிய பொறுப்பு தமிழ்பேசும் வாக்காளரிடம் உள்ளது. இம்முறைத் தேர்தலில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் வாக்குரிமை இருக்கிறது.

எனவே இளைஞர்களும் முதியவர்களும் ஆண்களும் பெண்களும் தங்கள் பொன்னான வாக்குகளை நிதானமாகச் சிந்தித்து அளிக்கவேண்டியது மிகமிக அவசியம்.

---

"வேலையில்லாத் திண்டாட்டம்

## சமூக ரீதியில தீர்க்கவேண்டும்"

யாழ்ப்பாணம், செவ்.

"நாட்டிலே பெருகி வரும் வேலையில்லாத் திண்டாட்டத்தை சமூகரீதியாகத்தான் தீர்த்து வைக்க வேண்டும். தனிப்பட்ட ஒருசிலருக்கு வேலை பெற்றுக் கொடுப்பதன் மூலம் நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டம் முற்றாகத் தீர்ந்துவிடப் போவதில்லை."

காங்கேசன்துறை தொகுதியில் ஐக்கிய இடதுசாரி அபேட்சகராகப் போட்டியிடும் திரு. வி. வைகுந்தவாசன் தம்மை ஆதரிக்குமுகமாக நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

தெல்லிப்பழை பட்டிக்கட்டையில் திரு. கார்த்திகேசு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் எமது கட்சித்தலைவர் டாக்டர் விக்கிரமசிங்கா காங்கேசன்துறை துறைமுகத்தின் அபிவிருத்தியின் அவசியத்தைப் பலமுறை பாராளுமன்றத்தில் வலியுறுத்தியதை நாம் மறக்க முடியாது என்றார்.

சுன்னாகம் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத் தலைவர் திரு. எஸ. விஜயானந்தன் பேசுகையில், 1950-ம் ஆண்டு நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் 4-வது தேசிய காங்கிரஸில் எடுத்த தீர்மானத்தின்படி இன்று இலங்கையிலுள்ள எல்லா இடதுசாரி முற்போக்கு சக்திகளும் ஒன்று சேர்ந்தது. இது சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய தொன்றென்றார்.

திருவாளர்கள் வி. மாசிலாமணி, பெரி. சண்முகநாதன் உட்பட வேறுபலரும் பேசினர்.

## மகாராணி வின்ஸர்- சீமாட்டி சந்திப்பு

லண்டன், மார்ச் 16

பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத் வின்ஸர் சீமாட்டியை 28 வருடங்களுக்குப்பின் முதல் தடவையாகச்சந்தித்தார். மகாராணியின் பெரியப்பா வின்ஸர் கோமகன் அமெரிக்காவைச் சேர்ந்த சிம்சன் சீமாட்டியைக் காதலித்து கடிமணம் செய்யவிருந்ததைத் தொடர்ந்து அரசபட்டத்தை இழந்தார். இப்போது வின்சர் கோமகனுக்கு பல சத்திரசிகிச்சைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த சுகவீனத்தைத் தொடர்ந்து இச்சந்திப்பு நடைபெற்றது.

---

# "மை பூசிய விரலால் தேர்தல்சீட்டை தொடக்கூடாது"

## வாக்காளர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, செவ்வாய்

தேர்தல்தினத்தன்று வாக்குச்சீட்டை இடதுகையால் தொடவேண்டாமென அரசியல்கட்சிகளும், தேர்தல் அதிகாரிகளும் வாக்காளர்களுக்கு விண்ணப்பம் விடுத்திருக்கின்றனர்.

இடதுகையால் அவர்கள் தொட்டால் அழியாமை அடையாளம் வாக்குச்சீட்டில்பிடித்து விடுமாதலால், அது செல்லாத வாக்காகக் கணிக்கப்பட்டுவிடும்.

ஒரு வாக்காளர் இடது கையை பாவிப்பவராக இருந்தால் அவர் விஷயத்தில் இந்த விஷயம் குறிப்பாகக் கவனத்திற்கெடுத்துக்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் அவர் சாதாரணமாக இடது கையையே உபயோகிப்பவராய் இருப்பார். சரியான முறையில்பொறிப்பதிவு அடையாளம் இல்லாவிட்டால் அவரது வாக்கு செல்லத்தகாத வாக்காகிவிடும் என வாக்காளர்கள் தேர்தல் அதிகாரிகளினால் எச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள். வாக்காளர்களுக்கு தேர்தல் சீட்டு விநியோகிக்கு முன் தேர்தல் சாவடி குமாஸ்தா, சாவடிக்குமுன் பொறிப்பதிவு அடையாளம் இடுவார். பல அங்கத்தவர் கொண்ட தொகுதியைத்தவிர இதர தொகுதிகளில் ஒரு வாக்காளர் ஒரு வாக்கை மட்டுமே பிரயோகிக்கமுடியும். இவ்விஷயமாக தீவிர கண்காணிப்பு செலுத்தும்படி தேர்தல் ஏஜண்டுகள் கோரப்பட்டிருக்கிறார்கள்.

ஒரு வாக்காளர் தேர்தல் சாவடியிற் பிரவேசித்தவுடன் முதலில் இருக்கும் உத்தியோகஸ்தருக்கு தனது இடது கைவிரலைக் காக்கவேண்டும் பின் அழியாமை விரலில் இடப்படும்

# கூட்டத்தில் விசப்பட்ட கற்கள் ரூபா 15 க்கு ஏலம்

யாழ்ப்பாணம், புதன்

அளவெட்டியில் திரு எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தை ஆதரிக்குமுகமாக நடைபெற்ற தமிழ் அரசுக்கட்சிப்பிரசாரக் கூட்டத்தில் வீசப்பட்ட மூன்று கற்கள் ஏலம்போடப்பட்டன. இதில்கிடைத்த ரூபா 15/-ஐ கட்சி நிதிக்காக ஜனுப் முத்துராசா கூட்டத்திற்கு தலைமை தாங்கிய போதகர் சுப்பிரமணியத்திடம் பகிரங்கமாகக் கையளித்தார். கடந்த தினம் முன்னிரவு அளவெட்டியில் நடைபெற்ற மாபெருங்கூட்டத்தில் உரைநிகழ்த்திய ஜனுப் முத்துராசா, "மார்க்சீயதத்துவங்கள் சமயதத்துவங்களைப் பூண்டோடு அழிக்கவல்லன. கோவில்கள், மசூதிகளில் மக்கள் செலவிடும் நேரங்களை விஞ்ஞான ஆராய்ச்சியில் கழிக்கலாம் என சோவியத் கம்யூனிஸ்டுகள் கூறுகின்றனர்" எனக் குறிப்பிடுகையில் மேடையை நோக்கி கற்கள் வீசப்பட்டன. பின்னர் கூட்டம் விறுவிறுப்புடன் நடைபெற்றது. மயிலையூர் வித்துவான் சண்முகதாசன் பேசுகையில் உரிமைப்போராட்டம் என்பது ஆயுதந்தாங்கிப் போராடுவது என்று அர்த்தமில்லை, அண்ணல் காந்திஜி அஹிம்சைமுறையில் இந்திய நாட்டுச் சுதந்திரத்திற்காக போராடியவழியிலேயே எமது போராட்டம் அமைகிறது. கடந்த சத்தியாக்கிரகப் போராட்டத்திலே சமஷ்டிக் கட்சியினர் அரசாங்கத்திற்கு தங்கள் எதிர்ப்பைக் காட்டியுள்ளனர். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நல்ல நிலவளம், கடல்வளம் நிறைந்திருக்கையில் காங்கிரஸ்கட்சி வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பொருளாதாரவளம் குன்றிய பகுதி எனக் குறிப்பிடுவது பெரும் விந்தையாக இருக்கிறது. கடல்தொழில்செய்ய நல்ல துறைகள் பருத்தித்துறை, காங்கேசன்துறை, மன்னார், திருமலை, முல்லைத்தீவு, மட்டுநகர் ஆகிய இடங்களில் இருப்பதால் எமது தமிழ்ப்பிரதேசத்தைவளம் அடையச்செய்கின்றன. வரண்டபிரதேச விவசாயம் எங்கள தமிழ்ப் பிரதேசத்திலேயேமுழுதும் அடங்கியுள்ளதெனக் குறிப்பிட்டார்.

திரு. குணராசா, செல்வி சதாசிவம் ஆகியோர் உட்படப் பலர் பேசினர்.

## சென்யீ பாக். விஜயம்

பீகிங், மார்ச் 16

சீன வெளிநாட்டு மந்திரி மார்ஷல் சென்யீ ஆப்கானிஸ்தான், நேபாளம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு விரைவில் புறப்படுவாரென அறிவிக்கப்பட்டது.

---

## ஐயாறன் எழுதுவது

கைவிரலில் தர்ப்பை தரித்து சங்கற்பம் செய்து கொண்டார் சோல்பரி பிரபுவின் புதல்வர் சந்தசுவாமி யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்வலமாக வந்த சிவதொண்டன் திருவடிகளுக்கு அபிஷேக ஆராதனை எல்லாம் முடிந்த பின் அவற்றைத் தட்டில் வைத்து சிரசில் எடுத்துக் கொண்டு பயபக்தியுடனே, செங்கலடியில் கட்டியுள்ள புதிய சிவதொண்டன் ஆசிரமத்தின் மச்சுப்படி ஏறி, அங்கிருந்த அழகிய மஞ்சத்தில் பிரதிஷ்டை செய்து வைத்தார் அவர். அத்துடன் சிவதொண்டன் அருளாட்சியும் கிழக்கில் ஆரம்பமாயிற்று.

புனிதமான இக்காட்சியைக் கண்டபோது, ஸ்ரீராமனின் பாதுகைகளை பரதன் தலையிலே தாங்கிச் சென்று அயோத்திக்கு வெளியேயுள்ள நந்திகிராமத்திலே சிங்காதனத்தில் வைத்து பட்டாபிஷேகம் செய்து தவவாழ்க்கைவாழ்ந்து அண்ணனின் பெயரால் ஆட்சி செய்த கதை தான் எனக்கு நினைப்பு வந்தது.

* * *

முதல் நாள் இரவு 12 மணி இருக்கும். நண்பர்களுடன் காரில் செங்கலடியை நெருங்குகையில் பல அன்பர்கள் தெருவில் தோரணங்களையும்வளைவுகளையும்கட்டிக்கொண்டிருந்தனர் என்ன விசேஷம் என்று கேட்டதற்கு, "சுவாமி வருகிறது, அதற்காகத்தான்" என்றனர். அந்த ஊரில் ஏதோ திருவிழா போலிருக்கிறதென்று நினைத்தோம். ஆனால் பின்னர் தான் தெரிந்தது, திருவடி ஊர்வலத்துக்காகத்தான் இந்த வரவேற்பு ஏற்பாடுகளெல்லாம் என்று.

யாழ்ப்பாணத்திலிருந்து வரும் சிவதொண்டன் திருவடிகள் பற்றி அந்த ஊர் மக்கள் என்ன நினைப்பார்களோ, அல்லது அந்த ஆசிரமத்துடன் ஒத்துழைப்பார்களோ என்று பல பல சந்தேகங்கள் பலருக்குமிருந்தன. ஆனால் சித்தாண்டிக்குடியிலுள்ள முருகன் கோவிலில் கல்யாண மண்டபத்திலே அந்தத் திருவடிகளுக்கு, அச்சனை ஆராதனையெல்லாம் தேவோபசாரத்தில் கோவில் குருக்கள் செய்த பக்திக் காட்சிகளையும், சுமார் நாலரைமைல் தூரம் நடந்த பவனியையும், வீடுவீடாக நிறைகுடம் வைத்து வழிபட்டதையும், அங்குள்ள பொதுமக்களின பக்தியையும், பள்ளிக்கூட மாணவ-மாணவிகள் நூற்றுக்கணக்கில், நற்சிந்தனைப் பாடல்களைப் பாடிக்கொண்டு ஊர்வலத்தில் கலந்து கொண்டதையும், ஆசிரமத்திலே நடந்த வழிபாட்டையும் பின்னர் சுமார் மூவாயிரம் பேருக்கு நடந்த அன்னதானத்தையும் கண்டவர்களுக்கு, அங்குள்ள பொதுமக்கள் எவ்வளவு தூரம் மகிழ்ச்சியுடன் ஒத்துழைத்து ஆதரவளித்துள்ளனரென்பது விளங்குவதாக இருந்தது.

* * *

ஒரு வெள்ளைக்காரர் நாலு முழ வேட்டி கட்டி மேலே சட்டை எதுவும் போடாமல் வந்திருந்தார். அவரது வெள்ளைக்கார மனைவியாரும் இலட்சணமாக பட்டுப்புடவை உடுத்தி நெற்றியில் குங்குமப் பொட்டு வைத்து தலைவாரிப் பின்னியிருந்தார். அழகான இருபெண் குழந்தைகளும் பாவாடை சட்டை அணிந்திருந்தனர். சைவ நாகரிகத்துடன் பொலிந்த அந்தக் குடும்பத்தைப் பற்றி விசாரித்ததில், அவர்கள் ஸ்விட்ஸர்லாந்தைச் சேர்ந்தவர்களென்றும், கொழும்பிலுள்ள ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தின் ஆசியபிரதேச காரியாலயத்தில் சென்ற இரண்டாண்டுகளாகப் பணி செய்வதாகவும், தெரிந்தது. அவர் பெயர் ஜீன்பெடிட்பியரியாம்,

4-ம் கலம் பார்க்க

(5-ம் கலத் தொடர்ச்சி)

இக்குடும்பத்தைக் கண்டதும், உலக நாடுகளைத்துமே, இப்புனிதத் திருவடி பிரதிஷ்டை விழாவில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்துவதுபோல் உணர்ந்தேன்.

* * *

இலங்கையிலேயே பல இடங்களிலும் வயல்களில் இவ்வாண்டு விளைச்சல் இல்லாதிருந்தும், இந்த ஆசிரம நிலங்களில் மட்டும் நல்ல சாகுபடியாம. உண்மைத் தொண்டரான ஸ்ரீசந்தசுவாமி பயிரிடும் திருப்பண்ணையில் நல்ல விளைச்சல் கண்டுள்ளதில் வியப்பில்லையல்லவா!

சில நண்பர்களுடன் அவர் பேசிக்கொண்டிருக்கையில், திடீரென எங்கோ பார்த்தோடினார் அவர். முதலில் எமக்குப் புரியவில்லை. தூரத்திலே ஆசிரமவளவுக்குள்ளாக வந்து மேய்ந்த ஒரு மாட்டை அவர் அதட்டி வாசலுக்கு அப்பால் ஓடி ஓடி விரட்டியதைப் பார்த்ததும், அவருடைய கடமை உணர்ச்சி தெரிந்தது.

அவரது நிர்வாகத் திறே. இந்த ஆசிரமம் எதிர்காலத்தில் வளர்ந்தோங்கி, [illegible] தொண்டாற்றப் போகிறதென்பதில் சந்தேகமில்லை, எல்லாம் ஸ்ரீயோக சுவாமிகளின் திருவருள்.

* * *

தெருவிலே நடந்தறியாத செல்வத் தாய்மார்கள், பெரிய அதிகாரிகளும் காலில் ஒன்றும் அணியாமல், சுமார் ஐந்து மைல் தூரமும், [illegible] பாடல்களைப் பாடிக்கொண்டு பாதயாத்திரை செய்ததையும், ஆசிரமத்தில் பலருக்கும் உணவு பரிமாறி தொண்டு செய்ததையும் நம்பமுடியவில்லை. அவர் தொண்டு அன்னதான மூலம் பரவி பலரது பசியையும் ஆற்றியது.

அங்கு ஒவ்வொருவரும் ஸ்ரீயோக சுவாமிகளின் அருமை பெருமைகளையும், தங்கள் அனுபவங்களையும் உணர்ச்சி பெருக்கெடுக்க பல பல ருசியான கதைகளைக் கூறினர். அத்தனையையும் புத்தகங்களாக வெளியிட்டால் எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும்.

* * *

உற்றாரிலாதார்க்குறுதுணையாவன ஓதி நன்னூல், கற்றார் பரவப் பெருமையுடையன காதல் செய்ய, சிற்றார் தமக்குக் கிளரொளி வானகந்தான் கொடுக்கும், அற்றார்களும் பொருள் காண்க ஐயாறன் அடித்தலமே.

— அப்பர் அடிகள்

# வடவியட்னாம் தலைநகரம் வரை அமெரிக்க விமானங்கள் ஊடுருவல்!

## நூற்றுக்கதிகமான விமானங்கள் சப்ளை தளங்களை தாக்கின

### ஆயுதக்கப்பல் வழி மறிக்கப்பட்டது

சைகோன், மார்ச் 16

நூற்றுக்கும் அதிகமான அமெரிக்க விமானங்கள் வடவியட்னாமில் நெடுந்தூரம் ஊடுருவி, தலைநகர் ஹனோயக்கருகிலுள்ள சப்ளைத் தளங்களைத் தாக்கியதாயும், இதன் விளைவாக 70 முதல் 80 சதவிகிதம் அழிவு ஏற்பட்டதாயும் அறிவிக்கப்படுகிறது.

வடவியட்னாமின் தொடர்ச்சியான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் தான் இவ்விதத் தாக்குதலுக்குக் காரணம் என வாஷிங்டன் அறிவிப்பு கூறுகிறது.

இதில் 6 அமெரிக்க ஜெட் விமானங்கள் அங்கு சுட்டு வீழ்த்தப்பட்டதாய் வடவியட்னாம் செய்திகள் கூறுகின்றன. மற்றும் பல விமானங்கள் பெரும் சேதத்துக்கு உட்படுத்தப்பட்டதாயும் அவை கூறின.

**ஆயுதக் கப்பல் மறிக்கப்பட்டது**

பற்றோரிடத்தில் தென்வியட்னாம் யுத்தக்கப்பல்கள் வியட்காங்கிகளுக்கு சீன ஆயுதங்களை ஏற்றிச் சென்ற படகு ஒன்றை வழி மறித்தனர்.

வேரோசிடத்தில் வடவியட்னாம் முகாம்களிலிருந்து தென்வியட்னாமிய யுத்தக் கைதிகள் 86 தென்வியட்னாமிய துருப்புகளை விடுவித்தன.

**லாவோஸில் தாக்குதல்**

லாவோஸில் வடவியட்னாம் துருப்புகள் ஒரு தாக்குதலை நடத்தின என்றும் இதனைக் காரணமாக 188 வடவியட்னாமிய கொல்லப்பட்டதாயும் லாவோஸ் அரசாங்கம் அறிவித்துள்ளது. வடவியட்னாம் துருப்புகள் ஊடுருவியிருப்பது குறித்து அது கண்டனம் தெரிவித்துள்ளது.

**நடுநிலைமை நாடுகள் வேண்டுகோள்**

பெல்கிரேட்டில் நடைபெற்ற 14 நடுநிலைமைப் பிரதிநிதிகளின் மகாநாடு விடுத்துள்ள கூட்டு விண்ணப்பத்தில் வியட்னாம் சம்பந்தமாக உடனடியாக பேச்சுக்களைத் துவக்க வேண்டும் எனக் கேட்டிருக்கிறது. இந்த விண்ணப்பம் சம்பந்தப்பட்ட நாடுகளின் பிரதமர்களால் அங்கீகரிக்கப்பட்ட பின் பிரசுரிக்கப்படும்.

**இந்தியாவுக்கு ரஷ்யா வேண்டுகோள்**

வியட்னாம் யுத்தம் பரவக்கூடும் எனத் தாம் அஞ்சுவதாக ரஷ்யா இந்தியாவிடம் தெரிவித்திருக்கிறது. இந்தியாவும், பிரான்சும் இதைத் தடுக்க தங்கள் செல்வாக்கை வாஷிங்டனில் பிரயோகிக்க வேண்டும் எனவும் அது கேட்டிருக்கிறதாம்.

**குரோமிக்கோ**

இதற்கிடையில் இன்று லண்டனுக்கு 5 நாள் விஜயத்தை மேற்கொண்டிருக்கும் சோவியத் வெளிநாட்டு மந்திரி குரோமிக்கோ பிரிட்டிஷ் தலைவர்களுடன் வியட்னாம் பற்றிப் பேசவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## லாவோஸிலேயே பேச்சு நடத்தவேண்டும்

நாம்பெங், மார்ச் 16

தென்கிழக்கு ஆசியாவில் நிலைமை கையை விட்டுப் போகுமுன் லாவோஸில் மூன்று கட்சி உயர் தலைவர்களும் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டுமெனப் பிரதமர் சுவர்ணபூமா பதட் லாவோ தலைவருக்கு விண்ணப்பித்திருக்கிறார்.

இப்பேச்சுக்களைப் பாரிஸில் நடத்துவதற்கு பதில் லாவோஸிலேயே நடத்தவேண்டுமென்றும் அவர் கூறியிருக்கிறார். பேச்சுக்களை மீண்டும் பாரிஸில் துவங்கவேண்டுமெனப் பதட் லாவோ தலைவர் விடுத்த வேண்டுகோளுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

---

## மேற்கு ஜெர்மனி வருத்தம்

பொன், மார்ச் 16

அரபுநாடுகள் தன்னுடைய ராஜதந்திர உறவுகளை முறித்துக்கொண்டுவிட்டது குறித்துக் கவலையடைவதாக மேற்கு ஜெர்மனி அறிவித்திருக்கிறது. ஆனால் அரபுநாடுகளுடன் நல்லுறவு கொண்டிருப்பதே தமது நாட்டின் உத்தேசமென்றும் அரபுநாடுகளிலுள்ள மேற்கு ஜெர்மன் தூதர்கள் திருப்பி அழைக்கப்படமாட்டார்களென்றும் அந்த அறிவிப்பு கூறியது.

---

## ராதாகிருஷ்ணனுக்கு சத்திர சிகிச்சை

புதுடில்லி, மார்ச் 16

இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் கண் சத்திர சிகிச்சைக்காக நேற்றிரவு லண்டனுக்குப் புறப்பட்டார். சிகிச்சைக்குப் பின் அவர் லண்டனில் 8 வாரங்கள் தங்குவார். ஜனாதிபதியின் கடமையை நிறைவேற்றும் பொருட்டு உப ஜனாதிபதி டாக்டர் ஸகீர் ஹுஸைன் இன்று பதவி பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

---

## லண்டனில் அப்துல்லா

லண்டன், மார்ச் 17

ஷேக் அப்துல்லா இங்கு கன்சர்வேட்டிவ் கட்சியின் ஆலோசனைக் கமிட்டியுடன் பேச்சு நடத்தினார். காஷ்மீர் பற்றி அவர் பேசியதாகத் தெரிகிறது. பிரிட்டிஷ் சொலிசிட்டர் ஜெனரல் திரு. டிங்கிள் புட்டையும் அவர் சந்தித்துப் பேசினார். லண்டனில் ஒழுங்கு செய்யப்பட்ட இரு கூட்டங்களில் அவர் பேசினார்.

---

## கேம்பியா ஐ. நா. அங்கத்தினர்

நியூயோர்க், மார்ச் 16

கெம்பியா ஐ. நா. வின் புதிய அங்கத்தினராக நேற்று அனுமதிக்கப்பட்டது.

## கானா சிறையிலிருந்து கடத்தப்பட்ட கடிதம்

### பிரிட்டிஷ் பிரதமருக்கு வந்தது

ஆக்ரா, மார்ச் 17

கானாவில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் அரசியல் தலைவர்களிடமிருந்து பிரிட்டிஷ் பிரதமருக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. இக்கடிதம் சிறையிலிருந்து கள்ளத்தனமாகக் கடத்தப்பட்டது. கானாவின் ஜனாதிபதி டாக்டர் நிக்ருமாவுக்கு எதிரான அரசியல் கைதிகள் சித்திரவதைக்கு உள்ளாகி வருவதாயும், சரியான உணவு, வைத்தியவசதி இல்லாமல் கொடுமைப் படுத்தப்படுவதையும், பல்வேறு சிறைகளில் 600 க்கதிகமான அரசியல் தலைவர்கள் இவ்வித நிலைமைக்கு உள்ளாகியிருப்பதாயும் அதில் கூறப்பட்டிருக்கிறது.

இவர்களை விடுவிக்க காமன்வெல்த் நாடுகள் முயற்சிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

## "கூச்பீகார் பகுதியில் இந்திய துருப்புகள் வாபஸாக வேண்டும்"

### பாகிஸ்தான் ஆட்சேபனை

காராச்சி, மார்ச் 16

புதுடில்லியிலுள்ள பாகிஸ்தான் ஹைகமிஷன், வெளிநாட்டு மந்திரி ஸ்வரண்சிங்கைச் சந்தித்து கூச்பீகார் பகுதியில் இந்தியத் துருப்புக்கள் பாகிஸ்தான் எல்லைப்பிரதேசத்திலிருந்து பாகிஸ்தானியர்களை பலவந்தமாக உள்ளே விரட்டியிருப்பதாய்ப் புகார் கூறினார். இது சம்பந்தமாக ஆட்சேபனை தெரிவித்துக் கொண்ட அவர் பாகிஸ்தான் மக்களை இந்தியத் துருப்புக்கள் கொடுமைப்படுத்தியதாயும், கொள்ளை, தீவைப்பு, துப்பாக்கிப் பிரயோகம் முதலியன நடத்தியதாயும், இதன் விளைவாகப் பலர் பலியாகியிருக்கிறார்கள் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இந்தியத் துருப்புக்கள் இங்கு ஏராளமாகக் குவிந்திருப்பதாயும், அகழிகளை வெட்டி வருவதாயும், மெஷின் பீரங்கிகளை நிறுத்தி வருவதாயும் இந்த ஆட்சேபத்தில் கூறப்பட்டிருக்கிறது.

இந்தியத் துருப்புகள் உடனடியாக வாபஸாக வேண்டும் என்றும் அவர் கோரியிருக்கிறார்.

## 30 கைதிகள் மோசமாக அடிக்கப்பட்டனர்

ஜெய்பூர், மார்ச் 16

ஜெய்ப்பூர் மத்தியசிறையில் சில கைதிகளுக்கும் சிறை அதிகாரிகளுக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டதாக சிறை இலாகா மந்திரி திரு மதுரதாஸ் மாத்தூர் ராஜஸ்தான் அசெம்பிளியில் தெரிவித்தார். அடுத்தகள் தாம மத்தியசிறைக்கு விஜயம் செய்த போது 30 கைதிகள் மோசமாக அடிபட்டிருந்ததைக் கண்டதாக அவர் சொன்னார். பூர்வாங்க விசாரணைக்குப் பின்னர் உதவி ஜெயிலர், 3 தலைமை வார்டன்கள், 1 வார்டன் ஆகியோர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டனர்" என்றும் மந்திரி கூறினார்.

கேள்வி ஒன்றுக்கு அவர் பதிலளிக்கையில் "சிறை அதிகாரிகள் அளவுக்கு மீறி அடித்ததாகவும், இதற்காக சபையிடம் மன்னிப்புக் கோருவதாயும் மந்திரி குறிப்பிட்டார்.

## 18 இந்தோனேஷியர் கொல்லப்பட்டனர்

### அமைதி தீர்வுக்கு மீண்டும் மலேஷிய பிரதமர் வேண்டுகோள்

கோலாலம்பூர், மார்ச், 16

மலேஷியப் பிராந்தியத்தில் ஊடுருவல் செய்த 18 இந்தோனேஷியர்கள் கொல்லப்பட்டதாய் கோலாலம்பூர் செய்திகள் கூறின. மற்றும் 11 பேர் சிறை பிடிக்கப்பட்டார்களாம்.

மலேஷிய-இந்தோனேஷியப் பிரச்னையில் அமைதி தீர்வு ஒன்றை உண்டாக்கும் பொருட்டு டாக்டர் சுகர்னோவைத் தாம் எந்த இடத்திலும், எப்போது வேண்டுமானாலும் சந்திக்கத் தயாராய் இருப்பதாக மலேஷிய பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் மீண்டும் கூறியிருக்கிறார்.

இந்தப் பிரச்னையில் எந்த நாடு மத்தியஸ்தம் செய்யமுன் வந்த போதிலும் அதைத் தாம் ஏற்பதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

## நீக்ரோக்களை பதிவு செய்ய புதிய மசோதா

### ஜனாதிபதி ஜோன்ஸன் இன்று காங்கிரசில் சமர்ப்பிக்கிறார்

வாஷிங்டன், மார்ச், 16

உத்தேச நீக்ரோ சிவில் உரிமை மசோதா பற்றி ஜனாதிபதி ஜோன்ஸன் அமெரிக்க பார்லிமெண்டின் கலப்புக் கூட்டத்தில் இன்று சொற்பொழிவாற்றுகிறார்.

இந்த மசோதாவின்படி தகுதியுள்ள எந்தப் பிரஜையும், எந்த நிறத்தவரும் வாக்குரிமையைப் பிரயோகிக்க வழியுண்டு. ஒரு ராஜ்யத்தில் அவர்கள் பெயரைப் பதிவு செய்ய மறுத்தால் பெடரல் அதிகாரிகளே சம்பந்தப்பட்டவர்களைப் பதிவு செய்ய மசோதா இடமளிக்கிறது.

ஜனாதிபதி இந்த மசோதாவை நாளை காங்கிரசுக்கு அனுப்புவார்.

இவ்விஷயத்தில் காமதிப்பதற்கான தருணம் போய் விட்டது என்றும், செயலில் ஈடுபடும் தருணம் வந்து விட்டது என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையில் டாக்டர் மார்ட்டின் லூதர் கிங் தலைமையில் 1000 க்கதிகமான நீக்ரோக்கள் சிவில் உரிமை ஆர்ப்பாட்டத்தின் போது கொல்லப்பட்ட பாதிரிகளுக்காக பிரார்த்தனை நடைபெற்ற ஊர்வலத்துக்கு அணிவகுத்துச் சென்றார்கள். இந்த ஊர்வலத்துக்கு முன்பு தடை விதிக்கப்பட்டிருந்த போதிலும், பின்பு பெடரல் நீதிபதியின் உத்தரவின் மீது ஊர்வலம் செல்வதை பொலிசார் அனுமதித்தனர்.

## காந்தி, நேரு வரலாறு 5000 ஆண்டுகள் பாதுகாக்கப்படும்

### நியூயோர்க்கில் ஏற்பாடு

நியூயோர்க், மார்ச், 16

நியூயோர்க் உலக விழாவில் நிலத்தில் புதைக்கப்பட்டிருக்கும் ஒரு எஃகு குழாய்களுள் கடந்த கால் நூற்றாண்டில் உலகத்துக்காகப் பாடுபட்ட தலைவர்களைப் பற்றிய வரலாறுகளை எழுதிப் பொறித்துவைப்பார்கள். மகாத்மாகாந்தி, ஜவஹர்லால்நேரு ஆகிய இரு தலைவர்களின் வரலாறும் அவற்றில் இடம்பெறும். வருங்காலத் தலைமுறையினர் பயன்பெறவே இந்த ஏற்பாடு.

தேர்வுகுழு தெரிந்தெடுத்துள்ள இதர தலைவர்கள் வருமாறு: பிராங்க்ளின் டி' ரூஸ்வெல்ட், ஹாரிட்ருமன், ஐஸனோவர், வின்ஸ்டன் சர்ச்சில், ஹமர் ஷீல்ட்.

கடந்த கால் நூற்றாண்டில் அவர்கள் பெற்றிருந்த செல்வாக்கு பற்றிய எழுத்தோவியங்களும் பல கோடிச்சொற்கள் கொண்ட வரலாற்றுக் குறிப்புகளும் அக்கால நிழற்சிகளை விளக்கும் ஆயிரக்கணக்கான படங்களும் குழாய்களுள் அடைக்கப்பட்டு, அக்டோபர் 15-ம் திகதி நிலத்தில் புதைக்கப்படும்.

1939-40-ம் ஆண்டில் நடைபெற்ற நியூயோர்க் உலக விழாவின் தொடக்கத்தில் புதைக்கப்பட்ட ஒரு குழாய்க்குள் அடங்கிய வரலாறுகளை இன்றைய நிலவரையில் திருத்தி வரைந்து புதிய குழாய்க்குள் அடைத்துள்ளார்கள். இருகுழாய்களும் கி. பி. 6939ல் திறக்கப்படும். அதாவது 1939 முதல் 5000 ஆண்டுகள் கழித்துத் திறப்பார்கள்

# "வளமற்ற வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு சமஷ்டி உதவாது"

## சாவகச்சேரியில் திரு. ஜி. ஜி

சாவகச்சேரி, செவ்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் எந்தவிதமான பொருளாதார வளமும் இல்லை. இந்த மாகாணங்களில் படித்த இளைஞர்கள் வேலையின்றித் தவிக்கின்றனர். இந்த நிலையில் மற்றைய மாகாணங்களில் தொழில் புரிபவர்களை இங்கு கொண்டு வந்தால் அவர்களை பராமரிக்க எந்தவிதமான திட்டங்களும் இல்லை. எனவே தான் இந்த சமஷ்டி அரசியல் அமைப்பை நாம் விரும்பவில்லை என்று அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு ஜி. ஜி. பொன்னம்பலம் மிருசுவில் சந்தை மைதானத்தில் சாவகச்சேரித் தொகுதி தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகர் திரு. எம். சிவானந்தத்தை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கூறினார்.

திரு. விஜூசித்தம்பி பொன்னையாவின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு பொன்னம்பலம் தொடர்ந்து கூறியதாவது:-

சமஷ்டிக்கட்சியினர் தமிழரசு என்று சொல்கின்றனர். தமிழரசு என்றால் என்ன? இலங்கையை இரண்டாகப் பிரித்து தமிழர்களுக்கு ஒரு ஆட்சியான தமிழரசும், சிங்களவர்களுக்கு ஒரு ஆட்சியும் என்பது தான் அர்த்தம். இந்தவசீகரமான பெயர் மூலம் அவர்கள் தமிழ் மக்களை வசீகரித்து வருகிறார்கள். ஆனால் அவர்கள் இதுகுறித்து பாடுபட்டார்களா? ஒருதடவது தமிழரசு பற்றி ஏதாவது பிரேரணை பாராளுமன்றத்தில் கொண்டுவந்து விவாதித்தார்களா? தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்துப் பாராளுமன்றத்தில் நான் ஐந்தரை மணித்தியாலம் பேசினேன். ஆனால் மட்டக்களப்பு முதலாவது எம்.பி இராஜதுரை இரண்டு சொற்கள் கூடச் சொல்லவில்லை".

திரு எம். சிவானந்தன் பேசுகையில் கூறியதாவது:

"தமிழினம் இன்று தமது அடிப்படை உரிமைகளை இழந்து அல்லற்படுகின்ற அவல நிலையில் நடைபெறுகின்ற இந்தத் தேர்தல் மிகவும் முக்கியமானது. இந்த நிலைமையில் தமிழ்மக்கள் தங்கள் வாழ்வை வளம்படுத்த எந்தக் கட்சியைத் தெரிவுசெய்யவேண்டுமென்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்."

திருவாளர்கள் ஸ்ரீ பாஸ்கரன் வே. இராசரத்தினம், செல்வி ஜெயமணி சின்னத்துரை உட்படப் பலர் பேசினர்.

---

### மயக்கமுற்றவர் மரணம்

யாழ்ப்பாணம் செவ்

வழக்கறிஞர் திரு. சி. சி. சோமசேகரம் வீட்டில் வேலை செய்துவந்த சங்கர் (89) என்பவருக்கு திடீரென ஏற்பட்ட மயக்கத்தினால் யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டார். அங்கு அவர் மரணமானார்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. அ. சிர்சிங்கம் நடத்திய மரணவிசாரணையில் சாட்சியமளித்தபின் மூளையில் இரக்கக்குழாய் வெடித்ததன் காரணமாக ஏற்பட்ட இயற்கை மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

---

### "தென்னாபிரிக்கா நிலை உலக பிளவுக்கு வழிவகுக்கும்"

லண்டன், மார்ச் 16

கேப்டவுனின் முன்னாள் ஆர்ச்பிஷப் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் தென்னாபிரிக்காவில் நிறமக்கள் நடத்தப்படும் விதம் உலகத்தில் பிளவுகளைத் தோற்றுவிக்கும் எனக்கூறியிருக்கிறார்.

REGAL — JAFFNA
NOW SHOWING
MARK RICHMAN
in
The Evils of Narcotics
(Murder Men) (Adults only)

### "உரிமை பெறுவதே நமது இலட்சியம்"

பருத்தித்துறை, செவ்.

நாம் தேர்தல் காலத்தில் மக்களிடம் கொடுத்த வாக்குறுதிகளின்படி எமது உரிமைகளைப் பெறப் பல போராட்டங்களை நடத்தினேம், உரிமைகளை ஒரு நாளிலோ அல்லது ஒருவருடத்திலோ பெற்றுவிட முடியாது. உரிமைகளைப்பெற நம்மிடையே ஒற்றுமையும் கட்டுப்பாடும் வேண்டும். ஒன்றுபட்டுச் செயல்படக்கூடிய ஒரு கட்சி மூலம்ஒரு தலைமைக்குக்கீழ் செல்லும் பிரதிநிதிகளால்தான் எதையும் சாதிக்க முடியும். அத்தகைய தகுதியும நேர்மையும் இலங்கைத் தமிழரசுக் கட்சியிடம் தான் உண்டு இவ்வாறு பருத்தித்துறைத் தொகுதி தமிழரசுக்கட்சி வேட்பாளர் திரு க. துரைரத்தினம் சுற்கோவளம் வாலிபர் விளையாட்டரங்கில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

திரு. த. இராமநாதபிள்ளை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில்திருதுரைரத்தினம் தொடர்ந்து பேசுகையில் தமிழரசுக்கட்சி கடந்த ஒன்பதுவருடகாலத்தில் எதைச்சாதித்துவிட்டது எனப்பலர் கேட்கின்றார்கள் என்றும் இலங்கைவாழ் தமிழ்பேசும் இனத்தை வேறு படின்றி ஒன்று சேர்த்து செயற்கரிய காரியமல்லவா என அவர்களை நான் கேட்பதுடன் போராட்டங்களையும் நினைவு கூரும்படி கேட்கவிரும்புகின்றேன் என்றும்கூறினர்.

"நாங்கள் எங்களுக்கு பெருமை புகழும் வரவேண்டுமென்று அல்லது பதவிபட்டம் இவற்றுக்காகவோ பாராளுமன்றம் செல்லவிரும்பவில்லை நமது இனத்தின் விடுதலை ஒன்றே நமது இலட்சியமாகக் கொண்டுள்ளோம், அதை அடைந்து தீரும்வரை ஆண்டு பலவானாலும் போராடியே தீருவோம்" என்று அவர் கூறினர்.

உடுப்பிட்டித்தொகுதி வேட்பாளர் திரு க. ஜெயக்கொடி உட்பட மற்றும் பலரும் பேசினர்.

---

### "சமஷ்டியால் பிரச்னை தீராது"

பருத்தித்துறை, செவ்.

"சமஷ்டி பெற முடியாது என்பதற்காக நாம் அதை எதிர்க்கவில்லை. சமஷ்டி எமது நாட்டிற்குப் பொருந்தாதுஎன்பதுடன் அதன் மூலம் எமது பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ள முடியாது என்பதனாலுமே எதிர்க்கின்றோம். சமஷ்டி தரச்சிங்கள மக்கள் விரும்பினால் அவர்கள் பிரச்னையுடன் ஒருவேளை தீர்க்கப்படலாம் எம்மை இரு சமூகத்துடன் விடுவைத்து ஏழு மாகாணத்திலும் அவர்கள் ஏகபோக உரிமை கொண்டாடலாம் இதைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சி பலமாக எதிர்க்கின்றது இந்த நாட்டில் எங்கும் எமக்கு உரிமை வேண்டும் எம்மொழிக்கு இலங்கை அங்கிலும் சம அந்தஸ்து வேண்டும் இதுவே எமது இலட்சியம்"

இவ்வாறு பருத்தித்துறைத் தொகுதித் தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகர் திரு க. நடராசா பொலிகண்டியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்

திரு க. நடராசாவை ஆதரிக்குமுகமாக திரு டி சரவணபெருமாள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு நடராசா மேலும் குறிப்பிட்டதாவது:-

உடுப்பிட்டித் தொகுதிவேட்பாளர் திரு மு சிவசிதம்பரம் பொய்ப் பிரசாரங்களை இட்டுத் தாம் வருந்துவதாகத் தெரிவித்ததுடன் இன்றைய நிலையில் தமிழ்க்காங்கிரஸ் கட்சி ஒன்றின் மூலம்தான் தமிழ்ப் பேசும் மக்கள் உரிமைகளை பெற முடியும் என்று கூறினர்

வழக்கறிஞர் திரு எஸ ஸ்ரீதரன், திரு கே பரமானந்தராசா, வழக்கறிஞர் பி கந்தசாமி லிங்கம், திரு ஆர் என் சிவப்பிரகாசம், செல்வன் தவராசா உட்பட மேலும் பலர் சொற்பெருக்காற்றினர்

# சமஷ்டி ஆட்சி அமைப்பில்தான் தமிழருக்கு நிம்மதியும் சுதந்திரமும்

## பிரசாரக்கூட்டத்தில் டாக்டர் நாகநாதன்

யாழ்ப்பாணம், செவ்வாய்

"நமது நாடு சுதந்திரம் பெற்று 15 வருடமாகியும் ஒற்றையாட்சியின் கீழ் தமிழர்கள் சுதந்திரமாக இதுவரை காலமும் வாழவில்லை சிங்கள அரசாங்கத்தின் கீழ் அடிமைகளாகவே வாழ்ந்து நசுக்கப்பட்டு வந்துள்ளார்கள். ஆகையினால்தான் தமிழரசுக் கட்சி இலங்கையிலே சமஷ்டித்திட்டத்தின்கீழ்தான் தமிழ் பேசும் மக்கள் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழ முடியும் என்று வலியுறுத்துகிறது."

யாழ்ப்பாணம் பெருமாள் கோவில் வீதியில் யாழ்ப்பாணத் தொகுதி தமிழரசுக் கட்சி வேட்பாளர் திரு சி எக்ஸ் மார்டினை ஆதரிக்குமுகமாக நேற்றுமாலை நடைபெற்ற தேர்தல்பிரசாரக்கூட்டமொன்றில் பேசிய நல்லூர் தொகுதி வேட்பாளர் டாக்டர் ஈ எம். வி நாகநாதன் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. செ. இரத்தினகோபால் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:-

"ஒரு நாட்டின் முதுகெலும்பு மொழி. அந்த மொழி அழிக்கப்பட்டால், அந்த நாட்டிலேயுள்ள இனம் நிலைத்துவாழ முடியாது. ஆகவே இந்த நாட்டிலே வாழும் தமிழ்பேசும் மக்களுடைய தமிழ்மொழி நிலைத்து வாழவேண்டுமானால், அதற்கு ஒரேயொருவழி-தமிழ் மக்களுக்காகப் போராடி வரும் தமிழரசுக்கட்சியினரை ஒரேமுகமாக பாராளுமன்றத்துக்கு அனுப்பிவைப்பதே தவிர வேறு வழியில்லை.

1956-ம் ஆண்டு 24 மணி நேரத்திலே தனிச்சிங்களம் கொண்டுவருவேன் என்று கூறிக் காலஞ்சென்ற பண்டாரநாயக்கா பிரதமரானபோது தமிழரசுக்கட்சி காலிமுகத்திலே சத்தியாக்கிரகம் செய்தது. இதே போன்று தமிழ் பேசும்மக்களுக்காக சென்ற பலவைமாகப் போராடிவரும் தமிழரசுக்கட்சி இனியும் உயிரையே பணயம் வைத்துப் போராடிவரும் என்று உறுதி தருகிறேம்.

1948-ம் ஆண்டு தொடக்கம் தமிழ்மொழிக்கும் சிங்கள மொழிக்கும் சமஅந்தஸ்துப் பெற்றுக்கொடுப்பதற்காக போராடிவருவதாக திரு ஜி. ஜி. பொன்னம்பலம் சொல்லி வருகிறார். ஆனால் இது பட்டப்பகல் பொய். 1948-ம் ஆண்டில் மொழிப்பிரச்னையின் எதுவிதமான பிரச்னையும் இருக்கவில்லை அன்றிருந்த சிங்களக் கட்சிகளும் அரசாங்கமும் தமிழ்மொழிக்கும், சிங்கள மொழிக்கும் சமஅந்தஸ்து என்ற கொள்கையையே மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டிருந்தார்கள்.

ஜனப் வ. மூத்துராசா பேசையில், 1958-ம் ஆண்டு நடைபெற்ற வகுப்புக்கலவரம் ஒன்றே தமிழ்மக்கள் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழ்வதற்கு சமஷ்டி ஆட்சி ஒன்றே சிறந்ததெனபதை எடுத்துக்காட்டிவிட்டதென்ருர்

திருவாளர்கள் மா. குணரத்தினம், மாநகரசபை அங்கத்தவர் என். சி. செல்லத்துரை உட்பட வேறு பலரும் பேசினர்.

---

# "இம்முறைத் தேர்தல் வர்க்கரீதியானது"

## உடுப்பிட்டியில் இடதுசாரிப் பிரமுகர் பேச்சு

உடுப்பிட்டி, செவ்வாய்

"இலங்கை அரசியல் சரித்திரத்திலேயே முதன் முதலாகத் தென்னிலங்கையில் அரசியல் கட்சிகள் இரண்டு வர்க்கங்களாகப் பிரிந்துள்ளன ஏழைகளும் தொழிலாளர்களும் ஓரணியிலும் முதலாளிகளும் சுரண்டிவாழ்பவர்களும் எதிரணியிலும் நிற்கிறார்கள். கூட்டரசாங்கத்தை வீழ்த்தும் பிற்போக்கு சக்திகளுடன் உடுப்பிட்டி முன்னாள் எம. பி யும் சேர்ந்து நின்றார், சர்வகலாசாலையில் நானும் அவரும் ஒன்றாகப் படித்த காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியிலேயே இருந்து இயங்கிவந்தோம். இன்று அவர் மாறிவிட்டார். தமிழினத்திற்காக நெடுங்காலம் வாதாடி வருபவர்கள் கூட்டரசாங்கத்திற்கு யாருடன் சேர்ந்து வாக்களித்தார்கள் என்பதை நன்கு உணரவேண்டும்"

இவ்வாறு சர்வகலாசாலைப் பௌதிகவியல் விரிவுரையாளர் டாக்டர் ஓ. மன்ட ஜயவர்த்தன உடுப்பிட்டித் தொகுதி ஐக்கிய இடதுசாரி அபேட்சகர் திரு ஆர் ஆர் தர்மரத்தினத்தை ஆதரிக்குமுகமாக கரவையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

டாக்டர் என். எம். பெரேராவின் வரவுசெலவுத் திட்டத்தின் பின்னரேயே நம்மை எதிர்ப்பதாக சபதம் கொண்ட பிற்போக்கு சக்திகள் ஒன்று சேர்ந்தன. கூட்டரசாங்கம் மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் முதலாவதாக முதலாளிகளின் மீதுதான் நடவடிக்கை எடுப்போம். நாம் சிறிய அளவில் தேயிலை ரப்பர் தோட்டங்கள் வைத்திருப்பவர்களுக்குச் சில சலுகைகளை வழங்கினேம். இலங்கையின் சரித்திரத்திலேயே முதலாவதாக வெங்காயம், மிளகாய் செய்கை பண்ணும் ஏழை விவசாயிகளின் நன்மை கருதி அவற்றை குறித்த விலைக்கே விற்கவேண்டும் என்று கூறினேம். நமது வரவுசெலவுத் திட்டம் தென்னிலங்கை முதலாளிகளை மாத்திரமன்றி வட இலங்கையிலுள்ள முதலாளிகளையும் தாக்கிய ஒரே காரணத்தினால் வட இலங்கையிலும் தென் இலங்கையிலுமுள்ள முதலாளிகள் இனவித்தியாசம் பாராட்டாது முதலாளிகள் என்ற அடிப்படையில் ஒன்றுசேர்ந்து நம்மை வீழ்த்தினர்.

டாக்டர் என். எம். பெரேரா நிதிமந்திரியானதும் சிங்களம் தெரியாத ஊழியர்கள் அரசாங்க சேவையில் இருக்க முடியாது என்ற அறிக்கையை வாபஸ்பெறச் செய்தார். கூட்டரசாங்கம் தோற்கடிக்கப்படுவதற்குச் சில காலங்களுக்கு முன்னரேயே பிரதேச சபைகளை ஆக்குவதற்குத் திட்டமிட்டிருந்தது வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தமிழை உத்தியோக மொழியாக்குவதற்குச் சட்டங்கள் தயாராகிக்கொண்டிருந்த வேளையிலேயே தமிழரசுக்கட்சியும் காங்கிரசின் ஒரே அங்கத்தவரென்று கூறிக்கொள்ளும் திரு. மு. சிவசிதம்பரமும் சேர்ந்து நம்மை வீழ்த்தினர். மார்ச் 22-ல் கூட்டரசாங்கம் அமையப்போவது உறுதி முதலாளிகளின் கொட்டங்கள் அடங்கப்போவதும் சோஷலிச சமுதாயம் மலரப்போவதும் உறுதி.

திருவாளர்கள் கே. மோதிலால் நேரு. ஆர். ஆர். தர்மரத்தினம், சண்முக ஜோதி ஆகியோருட்படப் பலர் பேசினர். கூட்டத்திற்கு அ வ. திரு. எஸ. ஜெயசிங்கம் தலைமை வகித்தார்.

2- வது மாதம்
கிங்ஸ்லி
(கொழும்பு)
பிளாஸா
(வெள்ளவத்தை)
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
வெம்பிளி
(கண்டி)
தினசரி 6-30, 9-30.



ஜெமினி கணேசன்
சாவித்திரி
மற்றும் பலர் நடிக்கும்
கற்பகம்

ஆசிரியருக்குக் கடிதங்கள்

# ‘இணைப்பாட்சிக் கொள்கையை மீண்டும் வலியுறுத்தவேண்டும்”

சோல்பரி ஒற்றையாட்சியின் கீழ் பெரும்பான்மைச் சிங்கள சகோதரர்களின் தயவில் வாழ்வதா? இன்றேல், இந்நாட்டுக்கு ஏற்றதோர் இணைப் பாட்சியை ஏற்படுத்தி இரு இனமும் இணைந்து வாழ்வதா? அல்லது தமிழ்ப்பிரதேசத்தை பிரித்தெடுத்து தனியரசினைப் பெற்று வாழ்வதா? என்ற மூன்று வழிகளில் ஒரு வழியைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். மிக நிதானத்தோடு நன்கு சிந்தனை செய்து பார்த்தால் இணைப்பாட்சியின் கீழ் இரு இனமும் இணைந்துவாழ வழி தேடுவதே மிகப் பொருத்தமாக தென்படுகின்றது.

அந்த வழிதான் எமக்கு நல்லது என்று முடிவு செய்தால் அவ்வழியை அடைய தமிழ்ப்பேசும் மக்கள் ஒன்றுபட்டு உறுதியோடு உழைக்க வேண்டியது தலையாய கடமையாகும்.

எம் இனம் இந்நிலையடைந்தமைக்கு எம்மினத்தவர்கள் யாவரும் ஒரு தாபன முறையிலே கட்டுக்கோப்பாக என்று சேர்ந்து இயங்கத் தவறியதே முக்கியகாரணமாகும். டொனமூர்த் திட்டம் புகுத்தப்பட்டபோது அதனை எதிர்த்தார்கள். பகிஷ்கரித்தார்கள் பின்னர் ஏற்றுக்கொண்டார்கள். தமிழ் பிரதிநிதிகளும், தமிழ்ப்பேசும் மக்களும் ஒருகட்டுக்கோப்பான தாபன முறையிலே-கொள்கையிலே-குறிக்கோளிலே ஒன்று சேர்ந்திருக்காத தன்மையால் எதிர்ப்பும், பகிஷ்கரிப்பும் கைவிடப்பட்டன என்பதை நாம் மறைக்க முடியுமா? அடுத்து சோல்பரி ஒற்றையாட்சித்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டப்படி அரசியல் அதிகாரங்கள் முழுவதும் பெரும்பான்மையினரின் கையில் ஒப்படைக்கப்பட்டன. இவ்வகீதியான அரசியல் திட்டம் ஓம் இனத்துக்குப் பாதகமானதென அன்றுள்ள தமிழ்ப் பிரதிநிதிகள் எல்லோரும் ஒன்று கூடி எதிர்த்தார்கள்.

ஏற்றதோர் சந்தர்ப்பம். தக்கவொரு சூழ்நிலை அவ்வொற்றையாட்சியை சிறுபான்மையினரின் சம்மதம் இல்லாமல் நிலைநாட்ட முடியாமல் இருந்தது ஒரே கொள்கையில் குறிக்கோளில் கட்டுக்கோப்பான ஒரு கட்சியில் தமிழ் பேசும் தலைவர்களும் மக்களும் இருந்திருப்பார்களேயானால் தமிழினத்தின் உரிமைகள்யாவும் நன்கு நிலைநாட்டப்பட்டிருக்குமென்பதில் சந்தேகமே இல்லை. அன்று தமிழ்த் தலைவர்கள் யாவரும் தனித்தனியாக ஒன்றுபட்ட கொள்கை இல்லாமல் பிரிந்திருந்தார்கள் இது காரணமாகவே எம்மினம் தாழ்வுற்றது என்பதை தமிழ் பேசும் மக்கள் ஒவ்வொருவரும் நன்குணர்ந்துகொள்ள வேண்டும். எனவே கொள்கையை நன்குணர்ந்து இலட்சியத்தை உயிரென மதித்து நடக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம். அவ்வாறான முறையில் ஒன்றுபட்ட ஒரு சமுதாயம் தான் தமது உரிமைகளைப் பெறவல்லது என்பதை நாம் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும். எனவே தமிழ் பேசும் மக்களின் ஒன்றுபட்ட ஒரு கொள்கையின்கீழ் சேர்ந்து ஒற்றுமையாகச் செயலாற்றினால் தமிழினம் வாழும் என்பது உறுதியாகும் இந்தச் சந்தர்ப்பத்தில் திரு. செல்வநாயகம் ஒருமுறை கூறிய விளக்கத்தைக் நினைவுபடுத்த விரும்புகிறேன் “ஒருகாலில் ஏற்பட்ட நோய்க்கு முதலில் பூச்சு மருந்து பூசிப் பார்த்தோம். அது பலனளிக்கவில்லை. அடுத்து சத்திரசிகிச்சை செய்து பார்ப்போம், அதுவும் பலன் ஆகவில்லையென்றால் காலைக் கழற்றிவிடுதலே கடைசி மருந்தெனக்கூறினர். பூச்சு மருந்து பூசிப் பார்த்தோம். [ஒற்றையாட்சியில் பெரும்பான்மையினரோடு நல்லெண்ணத்துடன் ஒத்துழைத்தோம். பலன் இல்லை. சத்திரசிகிச்சைசெய்து பார்ப்போம். ஒற்றையாட்சியை நீக்கி இணைப்பாட்சியின் கீழ் இணைந்து வாழ்வோம் என்று முயலுவோம். அதுவும் பலன் இல்லை என்ற ஆகக் கடைசி நேரத்தில் காலைக் கழட்டிக் கொள்வோம் என்று அருமையான ஒரு விளக்கத்தைத் தந்தார். இதனை இன்று தமிழினத்தின் அரசியல் நிலைமையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது திரு. செல்வநாயகம் ஒரு தீர்க்கதரிசி என்றே நினைக்கவேண்டியிருக்கிறது. அவர் கூறிய எடுத்துக்காட்டு இன்று தமிழ்பேசும் மக்களுக்கு தெளிவான உண்மையினைக் காட்டுகின்றது. இப்பொதுத் தேர்தலின்மூலம் மீண்டும் தமிழ் மக்களின் ஏகோபித்த நிலையான அரசியற் கொள்கையினை வெளிப்படுத்தல் வேண்டும். கௌரவமான முறையிலே சிங்களச் சகோதரர்களோடு இணைந்து வாழ்வதற்கு இருக்கின்றோம். ஐக்கிய இலங்கையை உருவாக்கவே விரும்புகிறோம் என்பதை சிங்களச் சகோதரர்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள விளக்கம் கொடுக்க வேண்டியதும் எமது முக்கிய கடமைகளுள் ஒன்றாகும். ஜனநாயக முறையிலே சாத்வீக வழியில் நின்று எமது உரிமைக்காக உழைத்தால் அது வீண்போகமாட்டாது. தர்மம் தலைகாக்கும், நீதி வெல்லும்.

தி. பஞ்சாட்சரம்,
மண்டைதீவு.

# எரிகிற கொள்ளியில் எந்தக்கொள்ளி...?

இலங்கையில் இரு பெருங் அரசியல் கட்சிகளாக ஐக்கிய தேசியக் கட்சியையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் சொல்லலாம். சில சந்தர்ப்பங்களில் தமிழர்களது அமோக ஆதரவைப் பெற்று விளங்கும் தமிழரசுக் கட்சியால் ஓர் அரசாங்கத்தை ஆக்கவும் அழிக்கவும் முடியும் என்ற நிலை ஏற்படுவதுண்டு. கடந்த காலங்களில் இப்படியான சந்தர்ப்பங்கள் இரு தட்வைகள் ஏற்பட்டன.

ஐக்கிய தேசியக் கட்சி மார்ச் தேர்தலின்பின் அதிகாரத்துக்கு வந்தபோது எதிர்க் கட்சிகள் கொண்டுவந்த ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தமிழரசுக் கட்சியும் ஆதரித்ததன் மூலம் அக்கட்சியைப் பதவியினின்றும் இறக்கியது. சுதந்திரக் கட்சி, அரசு கட்டில் ஏற வழியமைத்தது. அன்று தமிழரசுக் கட்சி நினைத்திருந்தால் ஐக்கியதேசியக் கட்சியை நிலை பெறச் செய்யவும் சுதந்திரக் கட்சியை பதவிக்கு வராதபடி செய்யவும் முடிந்திருக்கும்.

அடுத்து இதுவரை பதவியில் இருந்த சுதந்திரக் கட்சியையும் எதிர்க் கட்சிகளோடு சேர்ந்து சமீபத்தில் பதவியினின்றும் இறக்கியது. அடுத்த தேர்தல் நடைபெற வழியமைத்தது இதிலும் தமிழரசுக் கட்சி நினைத்திருந்தால் சுதந்திரக் கட்சியைத் தொடர்ந்து பதவியில் இருத்தவும் நடைபெறவிருக்கும் தேர்தலை நடைபெறாது செய்யவும் முடிந்திருக்கும்.

இப்படியான ஒரு சந்தர்ப்பம் தமிழரசுக்கட்சிக்கு மீண்டும் வரும்போது அவர்கள் என்ன செய்யவேண்டும்? எந்தக் கட்சியை ஆதரிக்கவேண்டும் என்பது தமிழரசுக் கட்சிக்கு ஒரு நீங்காத பிரச்னையாகத்தான் இருக்கும்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இவைகளில் தமிழரசுக் கட்சி எதை வீழ்த்தி எதை ஆதரித்தாலும் அதை ஆதரித்துப் பிரசாரம் செய்வதற்கு ஒரு கூட்டம் எப்பொழுதும் தயாராக இருந்து கொண்டேயிருக்கும். இதை முறையே காங்கிரஸ், இடதுசாரிக் கூட்டங்களைக் கேட்பவர்களோ அல்லது அவைகளின் பத்திரிகைகளைப் படிப்பவர்களோ எளிதில் உணர்ந்து கொள்ளலாம்.

ஐக்கிய தேசியக் கட்சியை வீழ்த்தியதால்தான் தமிழர்களுக்கு இத்தனை இன்னல்களும் வந்ததென்றும், அவர்களை ஆதரித்திருந்தால் இதெல்லாம் ஏற்பட்டிருக்காது என்றும் காங்கிரஸ் கட்சியினர் கூறுகிறார்கள், சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சி போன்ற பிற்போக்கு சக்திகளுடன் சேர்ந்து தமிழரசுக் கட்சி வீழ்த்தியிருக்காவிட்டால் இந்நேரம் மொழிப் பிரச்னைக்கு சமூகமான தீர்வு காணப்பட்டிருக்கும் என்று சமசமாஜ, கம்யூனிஸட் கட்சியினர் கூறுகிறார்கள்.

உண்மையில் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இந்த இரு கட்சிகளில் எதுவும் எமக்கு நல்லதல்ல. இரண்டும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே! இரண்டும் ஒன்றை ஒன்று வெல்லும் அளவிற்கு எமக்குத் தீமைகள் செய்திருக்கின்றன; இனிமேல் செய்யாமல் இருப்பதற்கும் உத்தரவாதம் கிடையாது. ஐக்கிய தேசியக் கட்சியை எடுத்துக்கொண்டால் இவர்கள் தமிழினத்தின் கொடியுரிமையைப் பறித்தும், பத்து லட்சம் மலைநாட்டுத் தமிழர்களின் குடியுரிமை வாக்குரிமையைப் பறித்தும், சிங்களம் மட்டும் சட்டத்தை ‘களனியில்’ நிறைவேற்றி எமக்கு கொஞ்ச நஞ்ச உரிமைகளைத் தற்காலிகமாக வழங்கக் கூடிய பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தத்தைக்கூட எதிர்த்துப் பிரசாரம் செய்தும், தமிழ் பகுதிகளை குடியேற்றத் திட்டங்கள்மூலம் சிங்களப் பகுதிகளாக்கத் திட்டமிட்டும் எமக்குப் பல தொல்லைகளையும் துயரங்களையும் விளைவித்திருக்கிறது. சுதந்திரக் கட்சியை எடுத்துக்கொண்டால் அது சிங்களம் மட்டும் சட்டத்தைத் துரிதப்படுத்தி ஏராளமான தமிழ் அரசாங்க ஊழியர்களைப் பதவியினின்றும் விரட்டியது, தமிழ் பிரதேசங்களை இராணுவத் தளங்களாக்கி தமிழர்களைக் கொடுமைப்படுத்தியது. புத்த மதத்தையே அரசாங்க மதமாக்க முனைகின்றது. ஐந்தேகால் இலட்சம் மலைநாட்டவரை நாடு கடத்தத் திட்டம் தீட்டியது. இப்படி இன்னும் பல

இப்படியான சுதந்திரக்கட்சி ஐக்கிய தேசியக்கட்சி ஆகியவைகளில் தமிழரசுக்கட்சி ஒன்றுக்கு ஆதரவுகொடுக்கும்போதோ அல்லது ஒன்றை வீழ்த்தும்போதோ ‘இருதலைக் கொள்ளி எறும்பு’ என்ற நிலையில் நின்றுதான் அதனைச் செய்திருக்கிறது. ஒன்றுக்கு ஆதரவுகொடுக்கும்போது ‘எரிகிற கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்லது’ என்ற முறையில் ஆராய்ந்துதான் ஆதரவு கொடுத்தது இனியும் அப்படியே செய்யவேண்டியிருக்கும்.

மேற்படி இரு சிங்களக் கட்சிகளில் எதை நம்பி நடந்தாலும் நடந்தவர்கள் எத்துணை தீர்க்கதரிசனம் நிறைந்த அரசியல் வாதிகளாக இருந்தாலும் அவர்கள் ‘நம்பிக் கெடு’வதையும் இக்கட்சிகள் நம்பிக்கைத் துரோகம் இழைப்பதையும் தடுக்க முடியாது.

இப்படியான பிரச்னை தமிழரசுக் கட்சிக்கு மீண்டும் வரும்போது-அதாவது எது செய்தாலும் ஒரு கூட்டத்தின் கண்டனத்துக்கு இலக்காகக் கூடிய ‘வேண்டாத பெண்டாட்டி கை பட்டால் குற்றம்; கால் பட்டால் குற்றம்’ என்ற நிலையில் தவிக்கும்போது தமிழ்மக்கள் ஒரேயொரு முறையில் தான் அவர்களுக்கு உதவி அவர்களது தவிப்பையும் தயக்கத்தையும் போக்க முடியும். அது மக்கள் தமிழரசுக் கட்சியை, தமிழர்களது நலனில் அக்கறை கொண்டு அவர்களது நலனுக்காக உள்ளத்தூய்மையுடன் போராடும் ஒரு கட்சி என்பதையும், அக்கட்சித் தலைவர்கள் தமிழ் மக்களுக்குப் பாதகமான எதையும் செய்ய மாட்டார்கள் என்பதையும், அப்படி ஏதாவது ஏற்பட்டால் அது தற்செயலாக ஏற்படுவதே என்பதையும் மனப்பூர்வமாக நம்பவேண்டும், அதன்பின் கட்சிக்கு இப்பிரச்னையில் முடிவு காண்பதற்கான பூரண அதிகாரத்தையும் வழங்கவேண்டும்.

பொ. சண்முகநாதன்
மானிப்பாய்

---

## ஓய்வுபெறும் அதிபர்

யாழ்ப்பாணம், புதன் மட்டக்களப்பு, பலாலி, கோப்பாய் ஆசிரிய கல்லூரிகளில் அதிபராகக் கடமையாற்றியவரும் தற்போது கொழும்புத்துறை ஆசிரிய கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றியவருமான திரு. எஸ். கனகலிங்கம் இவ்வாண்டு மே மாதம் முதலாந்தேதியிலிருந்து அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறவிருக்கிறார்.

இவரது நீண்டகால சேவையைப் பாராட்டுமுகமாக அன்னாரது ஆசிரிய மாணவர்கள் எதிர்வரும் ஏப்ரல் மூன்றாந் தேதியன்று ஒரு சேவைநலம் பாராட்டு விழாவை அன்னாருக்கு நடாத்தவிருக்கின்றனர்.

---


## வரி விளம்பரம்

### தேவை

பண வசூலிப்பாளர் (Collection officer) உடனே தேவை. நம்பிக்கையும் நேர்மையுமுள்ளவராக இருத்தல் வேண்டும். ஆரம்ப சம்பளம் ரூபா 100-00 கொடுக்கப்படும். டிபோசிட் பணம் ரூபா 750-00 உடனே கட்டவேண்டும். தகுதியானவர் நற்சான்றுப் பத்திரங்களுடனும் டிபோசிட் பணத்துடனும் நேரில் வரவும். உரிமையாளர், தமிழ்நேசன் பத்திரிகை அலுவலகம், 80, பெயஷால்வீதி, யாழ்ப்பாணம். 1799

அலுமினியப் பாத்திரவேலை செய்யக்கூடிய ஸ்பின்னரும், தகடுவிடக்கூடியவரும் தேவை, எவர்சில்வர் மாளிகை, 241, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1797

### விற்பனைக்கு

எங்கள் தயாரிப்பிலுள்ள “டோச்” மார்க் அலுமினியப் பாத்திரங்கள் குறைந்த விலையில் எம்மிடம் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம்.

எவர்சில்வர் மாளிகை, 241, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1748

காங்கேசன்துறை ஊரானில் எனும் இடத்தில், சீமெந்து தொழிற்சாலைக்கு கிழக்கு எல்லையிலும் காங்கேசன் துறை—கீரிமலை பிரதான வீதிக்கு அருகாமையிலும் 12 பரப்பு 4 குழி தோட்டக்காணி தனிக் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. எஸ். கிருஷ்ணஐயர், 2, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 1798

### கார்—அச்சுமெசின் விற்பனைக்கு

ஒரு பழைய ஒஸ்டின் 10, ஒரு டபின் கிறவுன் நல்ல சிலிண்டர் மெசின் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. கலாபவன அச்சகம், வியாபாரிமூலை, பருத்தித்துறை. 1776

### வைத்தியம்

கபால இடிக்கு சந்தனபலாட்சாதி தைலம். இன்னும் அனேக ரோகங்கள் குணப்படும். பொ. செல்லையா வைத்தியர், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 1760



## மீனவர்களுக்கோர் நற்செய்தி!

“பேர்க்கின்ஸ்”
அவுட்போட் மோட்டார்
(சிறுபடகு இயந்திரம்)

இந்தப்படகு இயந்திரம் 17-3-65 புதன்கிழமை மாலை 3 மணி தொடக்கம் 6 மணிவரை பருத்தித்துறை சுப்பர்மடம் கடற்கரையடியில் வெள்ளோட்டத்திற்கு விடப்படும்.

இவ்வியந்திரத்தின் சேவையையும், திறனையும் அறிந்துகொள்ள இது ஓர் அரிய சந்தர்ப்பம். அனைவரும் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

சமுத்திரா திரேடஸ் லிமிட்.,
23/2, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.



புகையிலை—வெங்காயம்—மிளகாய்—கத்தரி—தக்காளி—முந்திரிகை—கோவா முதலிய பயிர்களில் உண்டாகும்
அழுக்கணவனையும்—புழுக்களையும் அழிப்பதற்கு

BAYER

மெற்றசிஸ்ரொக்ஸ் உடன் - டிப்ரெறெக்ஸ்
METASYSTOX DIPTEREX
கலந்து நாற்று மேடையில் இருந்து பாவிக்கத்தொடங்கவும்

PHONE 397 JAFFNA ROYAL DISPENSARY T' GRAMS ROYAEL

# "சில மாதங்களில் வட்டமேஜை மகாநாட்டுக்கு முயற்சிப்பேன்"

## ஈழநாடு நிருபருக்கு திரு. ஜி. ஜி. விசேஷபேட்டி

யாழ்ப்பாணம், திங்கள்

"தென்னிலங்கையிலுள்ள பல கட்சிகள், தமிழர் பிரச்சினையைத் தீர்க்க வட்டமேஜை மகாநாடு நடத்துவதை ஆதரிக்கின்றன என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. புதிய பார்லிமெண்ட் கூட்டப்பட்டபின் ஒருசில மாதங்களில் இத்தகைய ஒரு மகாநாட்டைக் கூட்ட நான் முயற்சி எடுத்துக் கொள்வேன். ஒரு வருடத்தில், அல்லது இரண்டு வருடத்தில், ஆகக்கூடியது மூன்று வருடத்தில் தமிழ்மக்கள் பிரச்சினையில் ஒரு இணக்கமான முடிவை இதன்மூலம் சாதிக்கமுடியும் என்பது என் நம்பிக்கை" என தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் நேற்று ஈழநாடு நிருபருக்கு அளித்த விசேஷ பேட்டியில் கூறினர்.

"நீங்கள் பார்லிமெண்டுக்குப் போனல் தமிழர்களின் இழந்த உரிமைகளை இரண்டு அல்லது மூன்று வருடங்களில் பெற்றுத் தருவதாகக் கூறுகிறீர்களே. அவ்வளவு நிச்சயமாகக் கூறக்கூடிய வகையில் இவ்விஷயத்தில் என்ன நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கிறீர்கள்?" என்ற கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் கூறினர்.

"மொழிப் பிரச்சினை உட்பட தமிழர்களின் இதர அடிப்படை உரிமைகளையும், இந்தியத் தமிழர்களின் பிரஜா உரிமை விஷயத்தையும் கட்சிக்கப்பாற்பட்ட பிரச்சினையாகக் கருதி, அவற்றைத் தீர்க்க சகல கட்சிகளையும் கொண்ட ஒரு வட்டமேசை மகாநாட்டைக்கூட்ட வேண்டும் என்றும், இந்த மகாநாட்டிலேயே இப்பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்றும் பல்லாண்டுகளாக நான் கூறி வருகிறேன். தமிழர்களின் மத்தியிலுள்ள சிறந்த மதியூகியும், முதுபெரும் ராஜதந்திரியுமான திரு. இராஜகோபாலாச்சாரியார் கூட, இந்தியாவில் மொழிப் பிரச்சினையைத் தீர்க்க வட்டமேஜை மகாநாட்டை நடத்தவேண்டுமெனக் கூறியிருக்கிறர்" என்றும் திரு. பொன்னம்பலம் குறிப்பிட்டார்.

"தமிழ்மக்களின் இழந்த உரிமையை மீண்டும் நிலைநாட்டும் விஷயத்தில், ஆட்சிக்குவரும் எந்தக் கட்சியுடனும் ஒத்துழைப்பீர்களா?" என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், "சிங்களக்கட்சிகளில் ஜனநாயகம், சர்வாதிகாரவிரோதம், மாக்ஸீய விரோதம் ஆகிய கொள்கைகளைக் கொண்டதும், தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகளைச் சாதகமாக ஆராயக்கூடியதுமான எந்தக்கட்சியுடனும் எனதுகட்சி இணக்கமாக ஒத்துழைக்கும்" என திரு. பொன்னம்பலம் கூறினர்.

# 3-ம் டெஸ்ட் வெற்றி-தோல்வி இன்றி முடிந்தது

## சர் தேசாய் ஆட்டமிழக்காமல் 200 ரன்கள் எடுத்தார்!

பம்பாய், மார்ச், 15

இந்தியாவுக்கும் நியூஸிலாந்துக்குமிடையே இங்கு நடைபெற்ற மூன்ருவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி எக்கட்சிக்கும் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது. ஸ்கோர் விபரம் வருமாறு:

**இந்தியா**

முதல் இன்னிங்ஸ் 88 ரன்கள். 2-ம் இன்னிங்ஸ் 5 விக்கெட்டுக்கு 463 ரன்கள்.

**நியூஸிலாந்து**

முதல் இன்னிங்ஸ் 297 ரன்கள். 2-ம் இன்னிங்ஸ் 8 விக்கெட்டுக்கு 80 ரன்கள்.

இன்றைய ஆட்ட முடிவு மிகவும் விறுவிறுப்பாய் இருந்தது.

இந்தியவீரர் சர் தேசாய் ஆட்டமிழக்காமல் 200 ஓட்டங்களை எடுத்தது ஒரு பெரும் சாதனையாக அமைந்திருந்தது. இவருடன் விளையாடிய ஹனுமந்சிங், ஆட்டமிழக்காமல் 75 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

இந்தியாவுக்கும் நியூஸிலாந்துக்குமிடையே நடைபெற்ற முதலிரு டெஸ்டுகளும் எவருக்கும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன.

இரண்டாவது இன்னிங்ஸை திறமையாக விளையாடிய இந்தியா, நியூஸிலாந்து தனது இரண்டாம் இன்னிங்ஸை விளையாட ஆரம்பித்ததும் அற்புதமாக ஆடத் தொடங்கியது. நியூஸிலாந்து தனது 2-ம் இன்னிங்ஸில் ஆட்டமெதுவும் எடுக்காமல் இரண்டு விக்கட்டுகளை இழந்தது ஒரு துரதிருஷ்டமென்றே சொல்லலாம். முதல் விக்கட் விழுந்த 6 நிமிடங்களுக்குள் இரண்டாவது விக்கட்டும் விழ்ந்தது.

3-வது விக்கெட் வீழ்ந்தபோது நியூஸிலாந்து 18 ரன்களே எடுத்திருந்தது. அது 46 ரன்கள் எடுத்தபோது 7 விக்கெட்டுகள் சரிந்துவிட்டன. 76 ரன்கள் எடுத்த சமயம் 8-வது விக்கெட் வீழ்ந்தது. சந்திரசேகர் 3 விக்கெட்டுகளையும், துராணி 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்கள்.

4-வது டெஸ்ட் புதுடில்லியில் நடைபெறும்.

---

**ஆந்திரபிரதேசம்**

## தெலுங்கு ஆட்சி மொழியாகும்

ஹைதராபாத், மார்ச் 15

ஆந்திரபிரதேசத்தில் தெலுங்கை ஆட்சிமொழியாக்க விரைவில் மசோதா கொண்டு வரப்படும் என முதல் மந்திரி திரு. பிரம்மானந்தரெட்டி கூறினர். உருது, இரண்டாவது பிராந்தியமொழியாய் இருக்குமென்றும், ஏற்கனவே மும்மொழித்திட்டம் ரஜ்யத்தில் அமுலாக்கபபடுவதாயும் அவர் கூறினர்.

---

## சட்டவிரோதமாக சாராயம் விற்ருர்

### 150 ரூபா அபராதம்

காங்கேசன் துறை, திங்கள்

தையிட்டியைச் சேர்ந்த எஸ். பொன்னையா என்பவர் சட்டவிரோதமாக சாராயம்விற்பனை செய்ததாக குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் மல்லாகம் மாஜிஸ்திரேட் 150 ரூபா அபராதம் விதித்துள்ளார்.

இந்த வழக்கை காங்கேசன்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பி. தமோதரம்பிள்ளை தொடர்ந்திருந்தார்.

"சமஷ்டியினர்

## இப்போதுதான் ஏற்றுள்ளனர்"

— ஜி ஜி

யாழ்ப்பாணம், செவ்.

'தமிழ் காங்கிரஸார் பத்து வருடங்களாகக் கூறிவந்துள்ள சம அந்தஸ்தை இப்பொழுது தான் சமஷ்டியினர் ஏற்றுக் கொண்டுள்ளனர். இது ஒன்றே தமிழ் காங்கிரஸின் முதல்வெற்றியாகும்'.

இவ்வாறு தமிழ் காங்கிரஸ் தலைவரும் யாழ்ப்பாணத் தொகுதி அபேட்சகருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கொட்டடி முற்றவெளி மைதானத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் வண்ணர்பண்ணைக்கிளையினுல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டம் திரு இரா. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் திரு. பொன்னம்பலம் மேலும் பேசியதாவது:

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டுமல்லாது இலங்கையின் எப்பகுதியிலும் நமது வாலிபர்கள் வேலைவாய்ப்புப் பெற நமது கட்சி உழைக்கும்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பெறபபடும் உற்பத்தி இங்கு உள்ளவர்களுக்கு போதாது. இந்நிலையில் சமஷ்டி கிடைத்தால் எமக்கு துன்பமே தவிர இதனுல் இலாபமொன்றும் கிடையாது.

வீட்மைப்புத் திட்டம், தண்ணீர்த் திட்டம் இவற்றை கரையோரப் பகுதிகளில் வாழும் ஏழை மக்களுக்கு முதலில் பெற்றுத்தர நான் முழு முயற்சி மேற்கொள்வேன்.

அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கொழும்பு கிளைத் தலைவர் திரு எஸ சரவணமுத்து பேசுகையில் வல்லமை மிக்கவர்கள் பாராளுமன்றத்திற்குச் செல்வதாலேயே நமது இழந்த உரிமைகளைப் பெற முடியும் என்றுர்

குவாசி எம் எம் சுல்தான், திருவாளர்கள் எஸ ஸ்ரீதரன். ந சண்முகராஜா. கு வே சுவாமி உட்படப் பலர் பேசினர்

---

## 'பொருளாதாரத்தை பெருக்கினுல் பிரச்னைகள் தீரும்'

வவனியா, திங்கள்

"அடிப்படையில் இலங்கையில் சிறுபான்மையினரது பிரச்சினைகள் பொருளாதாரத்தில் அஸ்திவாரத்தை யுடையன. இவை சிங்களவர்-தமிழர் மத்தியில் வளர்ந்துகொண்டு போகும் வேலையில்லாத் திண்டாட்டம் தினசரி பாவனைக்கு அவசியமான பொருள்களது விலை வீக்கம், பொதுப்படை வறுமை ஆகியவற்றில் இருந்து உருவாகின்றன. சிறுபான்மையினர் பிரச்சினை, மொழிப் பிரச்சினை, காணி விநியோகப் பிரச்சினை இவற்றுக்கு தீர்வு காண உள்ள ஒரேயொரு வழி தேசத்தின் பொருளாதாரத்தை பெருக்கி சிங்களவருக்கும் தமிழருக்கும் இலேசான தொழில் வசதி அளிப்பதே"

வவனியா முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அகில இலங்கை தொழிலாளர் சம்மேளன பொதுச் செயலாளர் திரு கா. சண்முகதாசன் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

இக்கூட்டம் வவனியாத் தொகுதி கம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகர் திரு. ஆரியவன்ச குணசேகராவை ஆதரித்து நடைபெற்றது, இக்கூட்டத்திற்கு திரு எஸ. கிருஷ்ணபிள்ளை தலைமைவகித்தார். திரு. விக்டர் சில்வா உட்பட பலர் பேசினர்.

## விதை நெல்லுக்கு தட்டுப்பாடு

வவனியா, செவ்.

அண்மையில் வீசிய சூருவளியினுலும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட கடும்வரட்சி காரணமாகவும் வவனியா பகுதியில் விதைநெல்லுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது

கடந்த பெரும்போக வேளாண்மை செய்த விவசாயிகளுக்கு இதனுல் பெரும் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. வரட்சியினுல் பாதிக்கப்படாத விவசாயிகள், சூடு அடிக்கும் சமயத்தில் பெய்த மழையினுல் அவர்களுக்கும் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது இதன் விளைவாக எதிர்வரும் பெரும்போகத்துக்குத் தேவையான நெல்லுக்கு அதிக தட்டுபபாடு ஏற்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

---

## மாணவர்கள் தாக்கப்பட்டனர்

கொழும்பு, செவ்வாய்

அகலவத்தை ஐ. தே. கட்சி அபேட்சகரை ஆதரிக்குமுகமாக நடைபெற்ற ஒரு கூட்டம்பற்றி அறிவித்த 4 மாணவர்களும், ஒரு சாரதியும் லங்கா சமசமாஜக் கட்சியினர் எனக் கூறப்படும் சிலரால் தாக்கப் பட்டதாகத் தெரிகிறது.

மாணவர்கள் பிரயாணம் செய்த காரை இரண்டு கார்களில் விரட்டிவந்ததாகக் கூறப்படும் அவர்கள் வழியில் இக்காரை மறித்ததாகக் கூறப் பட்டது. பின் மாணவர்களை அவர்கள் தாக்கியதாயும், இதன் விளைவாக இரு மாணவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாயும் கூறப்படுகிறது பின் காரிலிருந்த ஒலிபெருக்கிகளை அவர்கள் சேதப் படுத்தி, காரை ஒருபுறம் தள்ளிவிட்டனர். பொலிசார் புலன் விசாரணை செய்துவருகிறுர்கள்.

---

## இன்று இராமர் பட்டாபிஷேகம்

யாழ்ப்பாணம், புதன்

வண்ணை ஸ்ரீ வேங்கடேசவரதராஜப் பெருமாள் கோவிலில் இன்று ஸ்ரீராம பட்டாபிஷேகம் நடைபெறுகிறது. காலை முதல் மாலைவரை பஜனை பிரார்த்தனை நிகழ்ச்சிகளும் மாலையில் ஸ்ரீராம பட்டாபிஷேக நிகழ்ச்சிகளும் அதன்பின் சொற்பொழிவுகளும் இடம் பெறும்.

---

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், செவ்

எதிர்வரும் வியாழக்கிழமை திருவீச்சரம் வள்ளிமலைக் கந்தசுவாமி கோவிலில் அலங்கார உற்சவம் ஆரம்பமாகின்றது.

18-ம் திகதி வியாழக்கிழமை சங்காபிஷேகம் நடைபெறும் 27-ம் திகதி சப்பரத்திருவழாவும் 30-ம் திகதி தெய்வநாயகி திருமணக்கோலமும் வள்ளிநாயகி திருமணக் காட்சியும் ஏப்ரல் மாதம் 1-ம் திகதி தேர்த்திருவிழாவும் 2-ம் திகதி தீர்த்தமும் சண்டேசுரர் உற்சவமும், நடைபெறும்.

---

## புதிய பஸ் சேவை

வவனியா, திங்கள்

வவனியாவிலிருந்து காக்கையன் குளத்துக்கு வவனியா பஸ நிலயத்திலிருந்து நேரடி பஸ சேவை ஆரம்பமாகியுள்ளது. இப்புதிய பஸ்சேவையை காக்கையன்குளம் கிராமசபைத் தலைவரும், பகுதி பொறுப்பதிகாரி திரு ஏ. ஆர். குமாரவேலுவும் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்கள் இச் சேவை வவனியாவிலிருந்து 6-00, 10-30, 1-00, 7-15 ஆகிய நேரங்களுக்கு ஆரம்பமாகும்

## பௌர்ணமிதின கலை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், புதன்

பௌர்ணமி தினத்தில் யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கில் யாழ். மாநகரசபை அளித்துவரும் கலைநிகழ்ச்சிகளில் இன்றுமாலை "சங்கிலியன்" நாடகம் நடைபெறுகிறது. யாழ் பிரதேச கலைமன்ற நாட்டு பாடல் நாட்டுக்கூத்து நாடகக்குழுவினரின் ஆதரவில் நடைபெறும் இந்நாடகத்தில் இலங்கை வானெலிப் பாடகர்களும் நாட்டுக்கூத்து, நாட்டுப் பாட்டுக் கலைஞர்களும் அண்ணவிமார்களும் நடிக்கின்றனர். திரு, ம, யோசேப்பு இதைத் தயாரித்துள்ளார்.

---

## தமிழருக்கென...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாட்சி வேண்டுமா என்பதையே இம்முறை தேர்தலில் பொதுமக்கள் தீர்மானிக்க வேண்டுமென்ருர். ஒற்றையாட்சி ஏற்பட்டால் சிங்கள குடியேற்றத்திட்டம் அதிகரிக்கும். அரசாங்கத்தின் சிங்களக்குடியேற்றத்தினுல் எமது பிரதேசம் பறிபோவதோடு பாராளுமன்றத்தில் எமது பிரதிநித்துவம் பறிபோய்க்கொண்டுவருகிறது. நாடற்ற மக்கள் நாளடைவில் அழிந்தொழிவார்கள். 1958-ம் ஆண்டு கலவரத்தின் போது நம்மினத்திற்குப் பாதுகாப்பளித்தது நமது பிரதேசமே யாகும்." என்று டாக்டர் நாகநாதன் கூறினர்.

திருவாளர்கள் முத்துராஜா, சுந்தரம், தம்பையா, மெய்யரசன் ஆகியோர் உட்படப் பலர் பேசினர்.

---

## "கங்கையை திருப்புவேன்"

வவனியா, செவ.

"கடந்த காலங்களில் தமிழரசுக் கட்சியினர் மேற்கொண்ட திட்டங்களுக்கு நாம் பூரண ஆதரவு கொடுத்தோம். எம்மால் அவர்களுடைய திட்டங்களுக்கு இலைஞ்சல் ஏற்பட்டு விட்டது என்ற அபவாதத்திற்கு இடமளிக்காமல் முழு மூச்சாக உதவி புரிந்தோம். தென்னிலங்கையில் உள்ளவர்களும் ஒருவித பாகுபாடுமின்றி சத்தியாக்கிரகம் செய்கிறுர்கள் என்று காணக் கூடியதாக இருந்தது. அவர்களுடைய திட்டங்களும் சமஷ்டிப் பிரசாரங்களும் எமது பொருளாதார வளம் அற்ற பகுதிக்கு ஆபத்து என்பதை அறிந்தும் கூடநாம் அவர்களை ஆதரிக்கத் தவறவில்லை. ஆனல் அவர்கள் திறமைசாலிகளை அனுப்பத் தவறுகிருர்கள்"

இவ்வாறு உடுப்பிட்டித் தமிழ் காங்கிரஸ் வேட்பாளர் திரு மு. சிவசிதம்பரம் வவனிக்குளத்தில் கிளிநொச்சி வேட்பாளர் திரு. வே: குமாரசாமியை ஆதரித்து நடந்த கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

வைத்தியகலாநிதி திரு. வி. ஏ. சந்திரசேகரம் தலைமை வகித்தார்,

கூட்டுறவு சமாசத் தலைவர் திரு. கே. தம்பு பேசியபின் திரு., வே, குமாரசாமி குறிப்பிட்டதாவது-

"மகாவலிகங்கையை அனுராதபுரத்திற்குக் கொண்டு வந்துவிட்டால் சிங்களவர் தாங்களாகவே அதை கடலுக்குத் திருப்பவேண்டும், இல்லாவிட்டால் அது அப்பகுதியை அழிக்கும். அதை வடக்கே திருப்பி எமக்கும் உதவப் பண்ணமுடியும்,

திரு. என், எஸ். சேதுகாவலர், திரு. எஸ். ஆர். தம்பு, திரு. அன்ரன் உட்பட்ப் பலர் பேசினர்.

---

## சாஸ்திரி

புதுடில்லி, மார்ச் 16

டில்லி மக்கள் நேற்று அளித்த வரவேற்பொன்றில் பிரதம மந்திரி லால்பகதூர் சாஸ்திரி பேசியபோது ஒற்றுமையின் சக்தியை வலுப் படுத்தவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தல் 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 17-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.